பக்கங்கள் : பதினாறு + II + II

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 15 வியாழக்கிழமை (28.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 161


சம்பவ இடத்தில் இராணுவம் ஆய்வு


பொலிஸ், இராணுவம் தேடுதல் நடவடிக்கை

### வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயம் அருகில்

# பொலிஸார் மீது கிளைமோர் தாக்குதல்

- பொலிஸ் அதிகாரி ஒருவர் காயம்
- விசேட அதிரடிப் படையினர் குவிப்பு
- சுற்றிவளைப்புத் தேடுதல் தீவிரம்
- வடமராட்சியில் பதற்றம்
- விசாரணைகள் ஆரம்பம்



15ஆம் பக்கம் பார்க்க

### மீசாலை வேம்பிராயில்
## ஆண் ஒருவர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

மீசாலை வேம்பிராய் இந்து மயானத்திற்கு அருகாமையில் உள்ள கள்ளுத் தவறணைக்கு அருகில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி முருகன்,கோவில் கிராம்பு 15

### மோ.சைக்கிள் விபத்தில்
## படுகாயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமுற்ற வயோதிபர் ஒருவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் 15

## தரம் 5

புலமைப்பரிசில்
மற்றும்
க.பொ.த (சா/த)
நாடகமும் அரங்கியலும்
வினாத்தாள்கள் உள்ளே

### மோட்டார் சைக்கிள் விபத்து
## யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். 15



### பொலிஸாரை அச்சுறுத்தும் வகையில்
## மணல் கடத்தல்காரர்களால் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம்
### பொலிஸ் ஆரம்ப விசாரணையில் சந்தேகம் வெளியீடு

(வடமராட்சி)

பொலிஸாரை அச்சுறுத்தும் வகையில் மணல் கடத்தல்காரர்களால் மேற்படி கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் 15

## இலங்கையில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் கொரோனா தொற்றாளர்


- நேற்றும் 134 பேர் கண்டறிவு
- 1,453 ஆக பாதிக்கப்பட்டோர் உயர்வு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 134 பேர் நேற்று புதன்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் 15

## முப்படை பலம் கொண்ட சிறந்த தலைவர் பிரபாகரன்
### ஹெகலிய ரம்புக்வெல புகழாரம்



*தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் முப்படை பலம் கொண்ட சிறந்த தலைவர் என ஹெகலிய ரம்புக்வெல புகழாரம் சூட்டியுள்ளார்.* 03

## யாழில் கொரோனா தொற்றுக்குள்ளான முதல் நபர்
### சிகிச்சையை முடித்து வீடு திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

யாழில் கொரோனா தொற்றுக்கு இலக்காகி முதலாவதாக அடையாளம் காணப்பட்ட நபர் சுமார் 65 நாட்களின் பின் வீடு திரும்பியுள்ள 15

## ஹொட்டல்கள் மண்டபங்கள் கண்காணிக்கப்படும்
### யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

உணவகங்கள், நட்சத்திர விடுதிகள் மற்றும் திருமண மண்டபங்களைத்திறப்பதற்கு யாழ்ப்பாண 15

## செட்டிக்குளத்தில் வெடி விபத்து சிறுவர்கள் இருவர் காயம்

(வவுனியா)

செட்டிகுளம் - வாழவைத்த குளம் பகுதியில் நேற்றைய தினம் இடம்பெற்ற வெடிவிபத்தில் சிறுவர்கள் இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று புதன் கிழமை மாலை இடம் பெற்றது. 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மணிவிழா வாழ்த்து




திருமதி
## கௌரியம்பாள் மாணிக்கராஜா
(ஆசிரியர் - யா/கோண்டாவில் இராமகிருஸ்ணா மகாவித்தியாலயம்)
(28.05.2020)

அறிவுப்பசி தீர்க்கும் ஆசிரியப் பணியை
நிறைவாக ஆற்றி ஓய்வு பெறும் வேளையிலே,
கண்டாவளை மண்ணின் உயர்வுக்காய்
கனவு நனவாக உழைத்தவரே,
பொருளியல் பாடமதை எமக்கு
பொறுப்போடு கற்பித்த ஆசானே,
குன்றாத இளமையுடனும்
மங்காத புகழுடனும்
வாழ்க வாழ்க என
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் - பழைய மாணவர்கள்
கிளி/கண்டாவளை மகாவித்தியாலயம்

# இதய அஞ்சலி



மண்ணில்
01
-
07
-
1959

விண்ணில்
27
-
05
-
2020

## அமரர் சின்னத்துரை சிவகாந்தன்
(ஓய்வு நிலை ஆசிரியர் யாழ்:மத்திய கல்லூரி)

ஆற்றல் மிகு ஆசிரியனே
எமை வழிநடத்திய வித்தகனே
விதி செய்த சதி வலையில்
உமை இழந்து தவிக்கிறோம்
ஆத்மா சாந்தி பெறட்டும்

எமது அன்பு நண்பனும் யாழ்:மாநகர சபை உறுப்பினரு
மான சி.தனுஜன் அவர்களின் தந்தையாரின் துயரில்

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்

(C-9637)

## தவறிவிட்டது

அராலியை வசிப்பிடமாகக் கொண்ட குணரெட்ணம் நிசுந்தன் என்பவருடைய 842702593V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(C-9634) தொடர்புகளுக்கு : 077 435 5109

# கரடி தாக்கியதில் ஒருவர் படுகாயம்

## விளாத்திக்குளம் பகுதியில் சம்பவம்

(மன்னார்)

மடு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விளாத்திக்குளம் வலையன்கட்டு பகுதியில் கரடியின் தாக்குதலிற்குள்ளாகி படுகாயமடைந்த நபர் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருகையில்,

நேற்றுக் காலை காட்டுப் பகுதிக்கு சென்ற இருவரை கரடி தாக்கியுள்ளது.

அவர்களில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அவசர அம்புலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

மற்றைய நபர் சிறுகாயங்களுக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# கண்ணீர் அஞ்சலி



## பரமசிவம் சுப்பிரமணியம்

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி ஸ்ரீரதி ஜோன்சன் அவர்களின் அன்புத் தந்தை **பரமசிவம் சுப்பிரமணியம்** அவர்கள் 27.05.2020 அன்று காலமானதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.

(2902)

# துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் வரலாற்றுப்பாட ஆசிரியர் திரு.சி.தனுஜன்
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் **சிவகாந்தன்**
[ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி]


இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் இழப்பில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

(C-9635)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
13
-
09
-
1947

மறைவு
20
-
05
-
2018

## அமரர் சின்னத்தம்பி பொன்னம்பலம்
(மகாலிங்கம் - கார் உரிமையாளர், சுன்னாகம் பஸ் தரிப்பிடம்)

**சோகத்தின் சுமையதனை சுமக்கின்றோம் இதயமதில்**
**பாசத்தின் உறவுகள் நாம் பரிதவித்து வாடுகின்றோம்**
**நேசத்தை மறந்தது ஏன் நெடுந்தூரம் சென்றீர்களோ?**

- குடும்பத்தினர்

ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
விதுஜா கூல்ஸ்பொட், கே.கே.எஸ். வீதி,
மல்லாகம்.

# முப்படைப்பலம் கொண்ட சிறந்த தலைவர் பிரபாகரன்!

## கெஹலிய புகழாரம்





(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகள் தரைப்படை, கடற்படை, விமானப்படை என முப்படைப்பலம் கொண்ட அமைப்பு என்றும் அதன் தலைவர் பிரபாகரன் சிறந்த தலைவர் என்றும் அரசாங்கப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல புகழாரம் சூட்டியுள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரான சரத் பொன்சேகா இப்போது ஏன் விடுதலைப்புலிகளையும் அதன் தலைவரையும் புகழ்ந்து பாட வேண்டும்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

பொதுத்தேர்தல் காலத்தில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறும் நோக்கத்துடன் விடுதலைப் புலிகளைப் புகழ்ந்தும் ராஜபக்ஷ குடும்பத்தைக் கண்டபடி விமர்சித்தும் எதிரணியினர் கருத்துக்களை வெளியிடுவது வழமை.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மீது எனக்கு மரியாதை உண்டு. போர்க் களத்தில் இறுதித் தோட்டா தீரும் வரையில் போராடிய சிறந்த தலைவர் என்ற காரணத்தால் பிரபாகரன் மீது நான் மரியாதை கொண்டுள்ளேன் என்று முன்னாள் இராணுவத் தளபதியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா, சிங்களத் தொலைக்காட்சி ஒன்றின் நிகழ்ச்சியில் தெரிவித்திருந்தார்.

இவ்விடயத்தைச் சுட்டிக்காட்டி கெஹலிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சிறந்த ஆளுமை கொண்ட தலைவர் என மேலும் புகாரம் சூட்டினார். இதேவேளை விடுதலைப்புலிகள் முப்படைப் பலத்துடன் சிறந்த தலைமைத்துவத்துடன் இருந்தார்கள். இதனை பிரதமர் பல தடவைகள் இராணுவத்தினர் மத்தியில் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார் என்றும் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

## வெள்ளை வான் ஊடக சந்திப்பு விவகாரம்

# ராஜித சேனாரட்னவின் பிணை மனுவை வேறு நீதிமன்றிற்கு மாற்ற உத்தரவு!



(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்னவின் பிணை மனுவை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு கொழும்பு பிரதான நீதவான் தீர்மானித்துள்ளார். சட்டமா அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்னவின் பிணை மனு மீதான விசாரணையை 2 ஆம் இலக்க நீதவான் நீதிமன்றில் விசாரிக்க வேண்டும் என கொழும்பு பிரதான நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தலின்போது சர்ச்சைக்குரிய வெள்ளை வான் ஊடகச் சந்திப்பு தொடர்பாக கைது செய்யப்பட்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## குணமடைந்தோர் 732

(கொழும்பு)

நாட்டில் நேற்றைய தினம் மேலும் 20 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இந்நிலையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இலங்கையில் இதுவரை குணமடைந்தோரின் எண்ணிக்கை 732 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 319 ஆகும்.

இந்நிலையில், கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள 577 பேர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். 75 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி இலங்கையில் 10 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 45 பில்லியன் ரூபாய் இழப்பு



(கொழும்பு)

கொரோனா நிலைமை காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 45 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியத்தில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்தாண்டு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 10.09 பில்லியன் நட்டம் ஏற்பட்டதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

## பொதுத்தேர்தல் தொடர்பான விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஜூன் மாதம் 20 ஆம் திகதி பொதுத்தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவர் அடங்கிய நீதிபதி குழாம் முன்னிலையில் விசாரணைகள் நேற்று ஏழாவது நாளாகவும் இடம்பெற்ற நிலையில், இன்று ஒத்திவைக்கப்பட்டது. (ஐ-4)

## அரசியலில் அரை செஞ்சுரி அடித்தார் மகிந்த!



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்திற்கு முதன் முறையாகத் தெரிவாகி நேற்றுடன் 50 வருடம் பூர்த்தியாகியுள்ளது.

1945 ஆம் ஆண்டு பிறந்த மகிந்த ராஜபக்ஷ 1970 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார் என்பதுடன் இவர் ஆரம்பத்தில் சட்டத்தரணி என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# கொரோனா தொடர்பில் வெளியிடப்படும் புள்ளி விபரங்களில் பொய் இல்லை

## சுகாதார அமைச்சு நிராகரிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள், உயிரிழந்தவர்கள் குறித்து வெளியிடப்படும் புள்ளி விபரங்கள் துல்லியமானவை என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அரசாங்கம் வெளியிடும் புள்ளி விபரங்கள் பிழையானவை. வேண்டுமென்றே குறைத்து காண்பிக்கப்படுபவை என சுயாதீனத் தொழில்சார் நிபுணர்களின் கூட்டமைப்பு என்ற அமைப்பின் அறிக்கை தொடர்பில் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

மாகாண மருத்துவ அதிகாரிகளும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் அரசாங்கம் வெளியிடும் தகவல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களும் அரச தகவல் திணைக்கள அதிகாரிகளும் தனிப்பட்ட முறையில் புள்ளி விபரங்கள் துல்லியமற்றவை என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர் என சுயாதீன தொழில் சார் நிபுணர்களின் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பபா பலிஹவர்தன இந்தக் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார்.

நோயாளர்கள், உயிரிழந்தவர்கள் குறித்த விபரங்கள் உரிய வைத்தியசாலைகளில் இருந்து கிடைத்ததும் உடனடியாக அவற்றைப் பகிரங்கப்படுத்துகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படைக்குள் மாத்திரம் தற்போது நோய்த் தொற்று காணப்படுகிறது எனக் குறிப்பிட்டுள்ள அவர், வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டவர்கள் மத்தியில் வைரஸ் தாக்கம் காணப்படுகிறது. ஆனால் அவற்றை தனிமைப்படுத்தல் முகாம்களுடன் கட்டுப்படுத்தி விட்டோம் எனவும் தெரிவித்துள்ளார்.

ஏனைய பகுதிகளில்கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். நாங்கள் நிலைமையைக் குறைத்து சித்திரிக்கின்றோம் என்ற குற்றச்சாட்டுகளை நாங்கள் நிராகரிக்கின்றோம் எனத் தெரிவித்துள்ள பபா பலிஹவர்த்தன எங்களுக்கு குறிப்பிட்ட பிரிவுகளில் இருந்து கிடைக்கும் புள்ளி விபரங்களைத் தவிர வேறு புள்ளி விபரங்கள் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# இராசிபலன்

28.05.2020
வைகாசி 15, வியாழக்கிழமை
சஷ்டி முன்னிரவு 9.11 மணிவரை
ஆயில்யம் பின்னிரவு 4.56 மணிவரை
சுபநேரம் 7.22 - 8.52 மணிவரை
இராகுகாலம் 1.22 - 2.52 மணிவரை
சந்திராஷ்டமம் பூராடம்
அக்கினி நாள் முடிவு, சஷ்டி விரதம்

வளவன்


மேஷம்

ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


ரிஷபம்

மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், சுப தகவல்கள் வந்து சேரலாம்.


மிதுனம்

கடினமான வேலைகளைக்கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.


கடகம்

இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு.


சிம்மம்

பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.


கன்னி

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


துலாம்

குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பிறர் உதவியுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.


விருச்சிகம்

புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


தனுசு

எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.


மகரம்

அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.


கும்பம்

குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று நடைபெறலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கருத்து வேறுபாடுகள் அகலும், காரிய அனுகூலமுண்டு.


மீனம்

பாராட்டும் புகழும் கூடும் நாள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், நீண்ட நாட்களாக செய்ய நினைத்த வேலையை இன்று செய்து முடிப்பீர்கள்.

யாரையும் எளிதாக நம்பாதே! யாரையும் எளிதாகச் சந்தேகப்படாதே!

# இந்தியா உட்பட 11 நாடுகளுக்கு ஜப்பான் தடை விதிப்பு

## பிரதமர் ஷின்ஸோ உத்தரவு

(டோக்கியோ)

கொரோனா பரவலை கட்டுக்குள் கொண்டு வருவதற்காக இந்தியா உட்பட 11 நாடுகளை சேர்ந்தவர்களை தங்கள் நாட்டிற்குள் நுழைய ஜப்பான் தடை விதித்துள்ளது.

ஜப்பானில் கொரோனா வைரஸ் பரவியதால் அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தற்போது கொரோனா வைரஸ் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதால் ஊரடங்கு உத்தரவுகளை தளர்த்தி பிரதமர் ஹின்ஸோ அபே உத்தரவிட்டுள்ளார்.


இந்நிலையில் கொரோனா பரவலை முழுவதும் கட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையாக இந்தியா உட்பட 11 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு ஜப்பானில் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஜப்பானில் 118 நாடுகளைச் சேர்ந்த மக்கள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் இந்தியா, ஆப்கானிஸ்தான், ஆர்ஜெண்டினா, வங்கதேசம், எல்சல்வடோர், கானா, கினியா, கிர்கிஸ்தான், பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, கஜிகிஸ்தான் ஆகிய 11 நாடுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த 11 நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று சில நாட்களுக்கு முன் ஜப்பான் அரசு அறிவுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-5)

# ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

## அமரர் சுப்பிரமணியம் நவரத்தினம்



அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் முன்னை நாள் தலைவரும் யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமாகய **திரு.நவரத்தினம் சிவகரன்** அவர்களின் அன்புத் தந்தையார் **அமரர் சுப்பிரமணியம் நவரத்தினம்** அவர்கள் 16.05.2020 அன்று சிவபதம் அடைந்தார். அவரின் ஆத்மா சாந்தி அடையவும் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் பிள்ளைகள், உறவினர்கள் இத்துன்பத்திலிருந்து ஆறுதலடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

**காந்தி சிறுவர் இல்லம் உருத்திரபுரமும்,**
**அகில இலங்கை காந்தி சேவா சங்கமும்,**
**காந்தி நிலையம்.**
**D8 உருத்திரபுரம்.**

(C-9633)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## திருமதி தங்கமுத்து சிவசுப்பிரமணியம்

(ஓய்வு நிலை ஆசிரியை)







தோற்றம்
11 • 07 • 1920

மறைவு
28 • 04 • 2020

**ஆயிரம் பிறை கண்டு–அகிலத்தில் வாழ்ந்து**
**ஆசிரியப் பணியால் பிறர்–வாழ்வினைச் செதுக்கி**
**பாரினில் நாம் பண்போடு வாழ ஆற்றுப்படுத்தி**
**எம் வாழ்வை ஒளிமயமாக்கி**
**எம் அகத்தினில் வாழும் அன்னையே**
**இந்நாளில் உம் நினைவோடு பிரார்த்திக்கின்றோம்.**


74/01, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்

(2893)

# மரண அறிவித்தல்

பிறப்பு
20
05
1944



இறப்பு
18
05
2020

# கந்தையா சிவபாதம்

## (இளைப்பாறிய பிரதி அதிபர், ஆசிரியர் கலாசாலை, பலாலி)

யாழ். வரணி கரம்பைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும், யாழ். சிவலிங்கப்புளியடி, ஜேர்மனி, இலண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சிவபாதம் அவர்கள் 18.05.2020 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கரத்தினம் அவர்களின் அன்பு மகனும், தமோதரம் பிள்ளை - தில்லையம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,

சர்வேஸ்வரியின் அன்புக் கணவரும்,

கிருபா, ஜனகன், வைதேகி (தீபா), ஆகியோரின் அன்புத் தந்தையும்,

ராகவன், ஜெயக்குமார், சுமதி ஆகியோரின் அன்பு மாமனாரும்,

ராஜேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற இராஜேந்திரம் (சந்திரன்), இரஞ்சினிதேவி (கனடா), கலாநிதி (கனடா), பரமேஸ்வரன் (ராதா - கனடா), பரமேஸ்வரி (ரதி - கனடா), தயாபரன் (சுவிஸ், கனடா), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,

ராமநாதன் (கனடா), ஜெயலக்சுமி (கனடா), மனோகரன் (கனடா), சோதிலிங்கம் (கனடா), சாந்தினிதேவி (கனடா), முத்துக்குமாரசாமி (கனடா), சுமதி (கனடா), தாமினி (சூட்டி - கனடா), காலஞ்சென்றவர்களான கனகேஸ்வரி, யோகநாதன் மற்றும் அழகேஸ்வரி (இலங்கை), கயிலைநாதன் (பிரான்ஸ்), ராமநாதன் (கனடா), தில்லைநாதன் (இலங்கை), காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் அற்புதநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

கோபிகா, சிந்துஜன், யதுஷன், அஸ்வினி, அர்யூன், ஜனோஜ், அனோஜ், நிஜேஷன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும்,

தர்மினி, சுகந்தன், சாமினி, அநந்தினி, மயூரினி, தக்ஷாயினி, நிஷாந்தன், நிஷானி, விஸ்ணுகோபன், நிதர்ஷன், தாரணி ஆகியோரின் அன்புத் தாய் மாமனும்,

வினோஜா, திபிஷா, அபிஷன், அபிஷேக், அபிஷாம், லக்ஷிகா, ஜஸ்வின், தாமிரன், ஹரினி, கிருஷ்னி, தனுராம், ஷேயோன், நயனி, ஜான்வி, ஆரவ், இளமாறன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஈமக்கிரியையினை 28.05.2020 இன்று இலங்கை நேரப்படி பி.ப.1.00 மணி முதல் நேரலையில் பார்வையிட Lankasri இணையத்தளத்தினை பார்வையிடலாம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| தொடர்புகளுக்கு : மனைவி - 00447741284874 | ராஜேஸ்வரி (கனடா) - 04162928593 | பாஸ்கரன் (கனடா) - 6479248592, |
| மகள் (லண்டன்) - 00447402201959 | கலாநிதி (கனடா) - 6475336564 | ரஞ்சினிதேவி (கனடா) - 001 4372334440 |
| மகன் (ஜேர்மனி) - 004917661529488 | ராதா (கனடா) - 6474997652 | ரதி (கனடா) - 0014167921789 |
| மகள் (லண்டன்) - 00447808849298 | தயாபரன் (கனடா) - 6168169943 | |

(C-9624)

# தொண்டமானின் மறைவுக்கு பலதரப்பினரும் இரங்கல்

(கொழும்பு)

**இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார். அவரின் இழப்பு தொடர்பில் அரசியல்வாதிகள், பல்வேறு அமைப்புக்கள் இரங்கல் தெரிவித்துள்ளன.**



மலையக மக்களுக்காக பாராளுமன்றத்திலும் வெளியிலும் ஒலித்த ஒரு குரல் இன்று மௌனித்து விட்டது. அமைச்சர் தொண்டமான் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டைமானின் வழியில் மலையக மக்களின் விடிவிற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஒரு தலைவராவார். அமைச்சராகப் பதவி வகித்த காலப் பகுதிகளில் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் நன்மை கருதி அநேக வேலைத் திட்டங்களை முன்னெடுத்த ஒரு தலைவராகவும் மக்களின் நலனை பிரதிபலிக்கும் வகையில் செயற்பட்ட ஒரு மக்கள் தலைவராகவும் செயற்பட்டார் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மலையக மக்களின் உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக ஓயாது ஒலித்த குரல் மௌனித்து விட்டதாக ஆறுமுகன் தொண்டமானின் மறைவு குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, தம்பி ஆறுமுகன் தொண்டமானின் இழப்பு மலையக மக்களுக்கு பேரிழப்பாகும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித்தலைவருமான முன்னாள் இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இவரது இறுதிக் கிரியைகள் மலையகத்தில் பூரண அரச மரியாதையுடன் நடப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இவரது இறுதிக்கிரியைகள் முடியும் வரை மலையகத்தில் துக்கத்தினம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆறுமுகன் தொண்டமானின் இழப்புக்கு முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனும் இரங்கல் வெளியிட்டுள்ளார்.

சுமார் இருபது வருடங்கள் மலையக சமூகத்தில் அவர் ஏற்படுத்திய மாற்றங்கள், அவரது ஆளுமைகளை வெளிப்படுத்துவதாகவும் கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி பயின்ற காலத்திலே அவர் சமூகத் தலைவனுக்குரிய ஆளுமைகளை வெளிப்படுத்தியதாகவும் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் தொண்டமானின் மரணத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட மக்களுக்காக பல வீட்டுத்திட்டங்களையும் மலையக வாழ், யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளுக்கான பல உதவித் திட்டங்களையும் அவர் மேற்கொண்டுள்ளார் என்று அங்கஜன் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக ஐரோப்பிய நாடுகளிலே நடைபெற்ற பல கூட்டங்களில் அவருடன் நான் கலந்து கொண்டிருந்தபோது தமிழர் பிரச்சினை தொடர்பில் அவர் ஆணித்தரமான கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

அவருடைய இழப்பு தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் ஒரு பேரிழப்பாகும் என தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்தன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஆறுமுகன் தொண்டமானின் திடீர் மறைவுச் செய்தியைக்கேட்டு நான் பேரதிர்ச்சி அடைந்தேன். அமரர்.ஆறுமுகன் தொண்டமான் மலையக மக்களை மிகவும் நேசித்த ஒரு மனிதர். எவருக்கும் அஞ்சாமல் தனது கருத்தை துணிச்சலுடன் எடுத்துரைக்கும் ஒரு மிடுக்கான அரசியல் தலைவர் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தனது இரங்கல் செய்தியைத் தெரிவித்துள்ளார்.

நண்பர் ஆறுமுகன் தொண்டமானும் நானும் வெவ்வேறு திசைகளில் பாயும் ஒரே இலக்கைக் கொண்ட நதிகள், இரட்டைக் குழல் ஜனநாயக துப்பாக்கிகள். மறைந்த நண்பர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கொழும்பு உட்பட மலையகமெங்கும் வெள்ளை, கறுப்புக் கொடிகளை பறக்க விடும்படி தமிழ் முற்போக்குக் கூட்டணி தோழர்களையும் அனைத்து மக்களையும் கோருகிறேன் என தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவரும் முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும் கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவு தொடர்பில் விடுத்துள்ள அனுதாபச் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களின் உரிமைக் குரலாகவும் ஊன்றுகோலாகவும் திகழ்ந்த ஆறுமுகன் தொண்டமானின் மறைவு மலையக சமூகத்துக்கு மட்டுமல்ல, முழு தமிழர்களுக்கும் பேரிழப்பாகும் என முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களின் உரிமைகளுக்காகவும் தேவைகளுக்காகவும் தொடர்ச்சியாக ஆறுமுகன் தொண்டமான் குரல் கொடுத்து வந்தார் என அவர் தனது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானின் திடீர் மறைவு மலையக மக்களுக்கு பேரிழப்பாகும்.

ஈழத் தமிழர்களைப் போலவே தமது இருப்பைத் தக்கவைத்து, உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் போராடி வரும் மலையகத் தமிழர்களின் வழிகாட்டியாக தனது முப்பது வயதிலேயே பாராளுமன்ற உறுப்பினராக மக்கள் ஆணை பெற்று ஓர் இளம் தலைவராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகவும் இருந்து இருபத்தைந்து வருடங்களாக மலையக மக்களின் அரசியற் பிரதிநிதியாக அம்மக்களுக்காகக் குரல் கொடுத்து வரும் ஆறுமுகன் தொண்டமானின் இழப்பு மலையக மக்களுக்கு பேரிழப்பாகும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் காலமானார் என்ற செய்தி அறிந்ததும் என் கண்கள் பனித்தன. மூத்த தொண்டமானைப் போலவே ஆறுமுகன் தொண்டமானும் ஈழத் தமிழர் நலனில் மிக்க ஈடுபாடு உடையவர்.

அவரோடு பழகிய நாட்கள் நெஞ்சில் நினைவு அலைகளாக மோதுகின்றன. இனிமையான பொறுப்பு வாய்ந்த மனிதநேய மிக்க ஒருவரை நாம் இழந்து விட்டோம் என சிவசேனை அமைப்பின் தலைவர் மறுவன்புலவு க.சச்சிதானந்தன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி,பிரதமர் இரங்கல்

(கொழும்பு)

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மறைவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் தமது ஆழ்ந்த இரங்கலை வெளியிட்டுள்ளனர்.

அந்தவகையில் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ தனது டுவிட்டர் பக்கத்தில் ஆறுமுகன் தொண்டமானின் இழப்பு கவலையை அளிக்கிறது எனப் பதிவிட்டுள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் அவருடனான தனது புகைப்படங்களை டுவிட்டரில் வெளியிட்டு அமைச்சரின் மரணம் அதிர்ச்சியளிப்பதாகவும் தனது நண்பனின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதாகவும் பதிவிட்டார்.

அதேவேளை அன்னாரின் மவைுச் செய்தியைக் கேள்வியுற்றதும் பிரதமர் மகிந்தராஜபக்ஷ நேற்று முன்தினம் இரவு தலங்கம வைத்தியசாலைக்கு நேரில் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## சீமான்,ஸ்ராலின் இரங்கல்

(சென்னை)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்கு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தி.மு.க.தலைவர் ஸ்ராலின் போன்றோர் இரங்கல் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் சீமான் தனது டுவிட்டரில், "இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவுற்ற செய்தியறிந்து வருத்தமுற்றேன். அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனப் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை ஸ்ராலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், தொண்டமானின் மறைவுச் செய்தி தாங்க முடியாத துயரத்தை அளித்துள்ளதாகவும் மலையகத் தமிழர்களின் உரிமைகளுக்காகப் பாடுபட்டு வந்தவர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவருடைய திடீர் மறைவுக்குப் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-7)

## 35 வருட கால ஆசிரிய சேவையாற்றி ஓய்வுபெறும் இந்நாளில் மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்

28.05.2020

திருமதி.கௌரியம்பாள் மாணிக்கராஜா
B.A(Hons) Eco & Dip.in. Edu.SLTS-I)



நல்லதோர் ஆசானாக நயந்து
நற்கல்வியூட்டி
பல்வகைப் பணிகளாற்றிப்
பாங்குடன் பாசங்காட்டி
வல்லவர் பலரை ஆக்கி
பல்கலைக்கனுப்பி வைத்து
எல்லையில்லா மகிழ்வால்
எழிலுறச் சேவை கொண்டு
அன்பொடு ஆசியோங்க ஆறுதல்
வார்த்தை பேசிப்
பண்புள மாணவரைப் படைத்திட்ட
மகிழ்வும் கண்டு
மனத்தக்க மனையாளாக
மாண்புறு அன்னையாக
உறவினைக் காத்து நின்ற உரிய
பண்பும் ஓங்க
மகிழ்வுறப் பணிபுரிந்து உளமது
உவகை பொங்க
மணிவிழாக் காண
இன்று வாழ்த்தினோம்
வாழி வாழி!



(2896)

பலாலி வீதி,
கோண்டாவில்.

குடும்பத்தினர்
076 772 5594

# 38 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் நாட்டுக்குத் திரும்ப முயற்சி

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக 143 நாடுகளில் இருக்கும் 38 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் மீண்டும் நாட்டுக்குவர முயற்சிப்பதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சு அமைச்சரவைக்கு நேற்று அறிவித்துள்ள விசேட அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

'கொரோனா வைரஸ் தொற்று காரணமாக 143 நாடுகளில் இருக்கும் 38 ஆயிரத்து 983 இலங்கையர்கள் மீண்டும் நாட்டுக்குவர முயற்சிக்கின்றனர்.

இவர்களில் 27 ஆயிரத்து 845 பேர் அந்த நாடுகளில் இருக்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இலங்கைத் தூதரகம் மீண்டும் திறப்பு

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் உள்ள இலங்கைத் தூதரகம் இன்று முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளது.

தூதரகத்தில் கடமையாற்றும் சிலர் கொரோனாத் தொற்றுக்குள்ளான காரணத்தால் கடந்த 21 ஆம் திகதி முதல் குறித்த தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# ஊரடங்கை மீறிய 411 பேர் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் நேற்று அதிகாலை 4 மணி வரையான ஊரடங்கு அமுல் படுத்தப்பட்ட காலப்பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 411 பேரும் அவர்கள் பயணித்த 81 வாகனங்களும்கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதே வேளை, கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் நேற்று வரை 66 ஆயிரத்து 314 பேர் கைது செய்யப்பட்டதுடன் இது வரை 18 ஆயிரத்து 695 வாகனங்கள் கைப் பற்றப்பட்டன.

கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் இது வரையான காலப்பகுதியில் ஊரடங்கு விதிமுறைகளை மீறிய 21 ஆயி ரத்து 225 பேருக்கு எதி ராக வழக்குத் தொடரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)


## ஆள் தேவை

முல்லைத்தீவுப் பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை.
ஆரம்பச் சம்பளம் மாதம் - 30,000/=
தொலைபேசி: 077 1681697
077 1133667


## 35 வருடகால ஆசிரிய சேவையாற்றி ஓய்வுபெறும் நாளில்
## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்

**சேவை விபரம்**

கிளி/ முரசுமோட்டை முருகானந்த மகா வித்தியாலயம்
26.12.1985 – 07.05.1991
கிளி/ கண்டாவளை மகாவித்தியாலயம்
08.05.1991 – 28.01.2003
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
29.01.2003 – 16.07.2006
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்
17.07.2006 தொடக்கம் இன்றுவரை

ஆசிரியர் பணியைத் திறம்பட ஆற்றி
ஓய்வுபெறும் ஆசிரியை
திருமதி.கௌரியம்பாள் மாணிக்கராஜா
B.A(Hons)Eco.Dip.in. Edu.SLTS-I)
(பகுதித்தலைவர்)
அவர்களின் மணிவிழா நாளில்
அவர்களுக்கு பிறந்தநாள் நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஓய்வுக்
காலம் சிறப்பாகவும், நலமாகவும் அமைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து



"வாழ்க வாழ்கவென வாழ்த்துவோர்"

Best Wishes!

(2378)

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

## 58 ஆவது பிறந்த தினத்தில் வாழ்த்துவதுடன்
## ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்




ஆசிரியர் பணியை திறம்பட ஆற்றி ஓய்வுபெறும் ஆசிரியை
திருமதி.கமலவேணி விஜயகுமார்
(B.com Dip in.Edu.S.L.T.S-I)
அவர்களின் 58 ஆவது பிறந்த தினத்தில்
நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன்
அவரது ஓய்வுக்காலம் சிறப்பாகவும் நலமாகவும்
அமைய எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்தித்து
வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

யா/மல்லாகம்.ம.வித்தியாலயம்
09.03.1990-03.01.1994
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி
04.01.1994-09.10.2012
யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்
10.10.2012-14.01.2013
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.
15.01-2013-28.05.2020

"வாழ்க வாழ்கவென வாழ்த்துவோர்" ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

# அமைச்சர் தொண்டமானின் உடலுக்கு அஞ்சலி!





(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் உடல் கொழும்பு, பத்தரமுல்லையிலுள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், தொழிற்சங்கவாதிகள், பொது மக்கள் எனப் பலரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.



இன்று வியாழக்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமியபவனிலும் உடல் அஞ்சலிக்காக வைக்கப் படவுள்ளது. (ஜ-4)

## ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நேற்று புதன்கிழமை காலை வெளியிட்ட அறிக்கையில் இந்த முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் மண்சரிவு மற்றும் பாறை வீழ்வு முதலான அபாய நிலை உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, குறித்த பகுதியில் உள்ள பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்துள்ளது. (ஜ-4)

## இரு வான் கதவுகள் திறப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக குக்குலே கங்கையின் இரு வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளது.

வெத்தாகல பகுதிகளில் நேற்று முன்தினம் பெய்த கனமழையால் குக்குலே கங்கை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது.

இதன் காரணமாக, குக்குலே கங்கை நீர்த்தேக்கத்தை அண்டிய தாழ் பகுதியில் வசிக்கும் மக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: 55 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: அதிபர்<br>எதிர்பார்ப்பு: கிராமசேவகர், தாதி தவிர்ந்த வேறு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகள்<br>தொ.இ: B/10789 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 57 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ பட்டதாரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் சைவ போசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/7896 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா:27 ½ செவ் 5இல் உயரம்: 6'<br>தகைமை/தொழில்: B.Sc, கணனி நிகழ்ச்சி திட்டமிடலாளர் (அரச)<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/10792 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 32 சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: HNDA, தனியார் வங்கி ஊழியர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/7922 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா:செவ் 10 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: வெளிவாரி பட்டதாரி Private Company<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10793 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: 5 செவ் 5 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7944 |
| பிறப்பு: 1987 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: செவ் 12 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தொலைபேசி விற்பனை நிலையம் மற்றும் திருத்தும் நிலையம் (சொந்தம்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10795 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: செவ் 4 இல் உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: B.Sc (Hons), Project Quantity Surveyor .<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7963 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## இந்து ஆலயங்களில் தொடரும் நாசகாரச் செயற்பாடுகள்



(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இந்து ஆலயங்களின் புனித சூழலை நாசமாக்கும் விசமிகளின் இனவாத செயற்பாடுகள் மீண்டும் அரங்கேறியுள்ளன.

வைகாசி மாதம் பிறந்தாலே கிழக்கில் கண்ணகி திருவிழாக்கள் பிரபலமானது. அம்பாறையில்வைகாசி குளிர்த்தி விழாவை முன்னிட்டு ஊர் இளைஞர்களால் ஆலயச் சூழல்களைச் சுத்தமாக்கும் பணிகள் ஆங்காங்கே காரைதீவு, கல்முனை, வீர முனை ஆகிய இடங்களில் இடம் பெற்று வருகின்றன.

இந்நிலையில், ஆலயங்களின் புனித சூழலை நாசமாக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக ஒரு சில இனவாதிகளால் இடம் பெற்று வருகின்றன.

கல்முனை கண்ணகி அம்மன் கோயில் சூழல், இரு நாட்களுக்கு முன்பு அதேபோன்று காரைதீவு கோயில், வீரமுனை கண்ணகி கோயில் ஆகிய சூழல்களிலே இவ்வாறு தொடர்ச்சியாக நாசகாரச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. (ஜ-4)

## கால எல்லை நிறைவு

(கொழும்பு)

2020 மற்றும் 2021 கல்வியாண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்கு இணையத்தளம் மூலமான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் காலம் எதிர்வரும் ஜூன் 22 ஆம் திகதி நிறைவடைவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஜ-4)

## பள்ளத்தில் பாய்ந்த ஆட்டோ!

(தலவாக்கலை)




தலவாக்கலை டயகம பிரதான வீதியில் லிந்துலை வைத்தியசாலைக்கு அருகில் ஆட்டோ ஒன்று நேற்று முன்தினம் வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

எல்ஜின் பகுதியிலிருந்து தலவாக்கலை நோக்கி சென்று கொண்டிருந்த ஆட்டோவே இவ்வாறு வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

ஆட்டோ சாரதி சிறுகாயங்களுடன் உயிர் தப்பினார். (ஜ-2)

# "ஈனமில் கிருமிச் சமர்"



வாழ்நாள் பேராசிரியர்
அ.சண்முகதாஸ்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இப்பொழுது கொரோனா நுண்ணங்கியால் நாம் எல்லோரும் ஏதோ வகையில் இடருற்று வருந்துகிறோம். இந்த வேளையில் நமக்கெல்லாம் உறுதுணையாக நின்று மருத்துவர்கள், பொலிஸார், படைவீரர்கள், அரச அலுவலர்கள் எல்லோருமே எங்களை இந்த நுண்ணங்கியிலிருந்து காக்க துணை செய்கின்றார்கள். இந்த வேளையில்தான் எங்களைக் காக்கும் இவர்களையும் எங்களையும் காக்க ஓர் இறை இருக்கின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இத்தொற்று நோய் போன்ற பல இடர்கள் முன்னர் ஏற்பட்டபோது நம்முடைய மூதாதையர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக இறை அருளையும் வேண்டி வழிபாடு செய்தனர்.

கொரோனா நுண்ணங்கியின் தொற்று, நீக்கப்படவேண்டிய, முற்றாக இல்லாமலாக்கப்பட வேண்டிய நிலையிலே உள்ளது. இதற்கு 'சமூக இடைவெளி' வேண்டுமென மருத்துவர்களும் நலன்பேணுபவர்களும் திரும்ப திரும்பக் கூறுகிறார்கள். இந்தப் பயிற்சி நமக்கு திருக்கோயில்களிலே 'வழிபாட்டு இடைவெளி' ஆகத் தரப்பட்டு வந்தது. ஆனால் அதை நாம் முற்றாகப் பின்பற்றாது கைவிட்டோம். திருக்கோயில்களுக்குள்ளே இறையை வணங்கும்போதோ பிரசாதம் வாங்கும்போதோ ஒருவர்பின் ஒருவராக ஒழுங்காகச் செல்வதற்கு எங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. பின்னாலே நிற்பவர் உயரம் குறைந்தவர். அவராலே கர்ப்பக்கிரகத்தைப் பார்க்க முடியாது. அவருக்கும் வழிவிட வேண்டும் என்ற எண்ணமோ எவருக்கும் இல்லை. ஒருவரையொருவர் நெருக்கவும் இடிக்கவும் தள்ளவும்தான் அறிந்துள்ளோம். ஒழுங்காக 'வழிபாட்டு இடைவெளியினைப் பின்பற்றி இறை வணக்கம் செய்தால் எல்லோரும் நன்றாக மகிழ்வாக வணங்கலாம். இதனை நமக்கு மீண்டும் நினைவூட்டவும் பயிற்சி தரவும் ஒரு கொரோனா நுண்ணங்கி வரவேண்டுமா? வந்துவிட்டது. இதனை முற்றாக நீக்க வேண்டுமாயின் உருப்படியான உயர்ந்த மருத்துவ அறிவுரையுடன், வழிபாடும் நமக்குக் கைகொடுக்கும்.

திருஞானசம்பந்தர் நமக்கு வரக்கூடிய இடர்களையெல்லாம் களைய வேண்டும் என இந்த அண்டத்திலே உள்ள கோள்களை வேண்டுகிறார். அவ்வாறு வரக்கூடிய இடர்களிலே நோய்களையும் குறிப்பிடுகிறார். அவர் பாடிய கோளறு பதிகத்தில் **"கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர் கொடு நோய்களான பலவும்"** என்று கூறுகிறார். இடர்கள் வரும்போது நாம் இறை வழிபாட்டிலே ஈடுபடுவது இயல்பானதாகும். ஜப்பானிலே கொடுமையான எரிமலை தீயினை வெளிப்படுத்தும்பொழுது அது தொடர்பாக அறிவியல் தடுப்பு முயற்சிகள் நடைபெறும்போதும், அவ்வூர் முதுமக்கள் எரிமலையின் வேகம் தணியவேண்டுமென இறைவனை வேண்டி மடையிட்டு வழிபடுவார்கள்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கொடிய நோயை நாட்டிலிருந்து அகலுமாறு பெரியாழ்வார் இறை ஆணையுடன் துரத்துகிறார்.

**"உற்ற உறுபிணி நோய்காள்!
உமக்கொன்று சொல்லுகேன்
கேண்மின்,
பெற்றங்கள் மேய்க்கும்
பிரானார்
பேணும் திருக்கோயில்
கண்டீர்,
அற்றம் உரைக்கின்றேன்
இன்னம்
ஆழ்வினைகாள்! உமக்கு
இங்கோர்
பற்றில்லை கண்டீர் நடமின்,
பண்டன்று பட்டினம் காப்பே."**

என்று நோய்களை இந்த பட்டினத்திலிருந்து அகலுமாறு கூறுகிறார். திருப்பாற்கடலிலே பள்ளிகொள்ளும் திருமாலை, இந்த நோய்களால் எந்தத் தீவினையும் வராமல் பட்டினம் காவற் பொருட்டாக வேண்டுதல் செய்கிறார்.

**"அரவத் தமளியி னோடும்
அழகிய பாற்கட லோடும்
அரவிந்தப் பாவையும் தானும்
அகம்படி வந்து புகுந்து
பரவைத் திரைபல மோதப்
பள்ளிகொள் கின்ற பிரானை
பரவுகின்றான் விட்டு சித்தன்
பட்டினங் காவற் பொருட்டே."**

பட்டினங் காக்கப்பட்டால் நாடு காக்கப்படும். நாடு காக்கப் பட்டால் உலகம் காக்கப்படும். காப்பவன் இறைவனல்லவா!

இன்று நாம் அச்சத்துடன் வாழக்காரணமாயுள்ள கொரோனா நுணாங்கிக்கு எதிராக உலகமெல்லாம் அறைகூவலுடன் செயற்படுகின்றது. இத்தகைய நுண்ணங்கி (கிருமி)க்கு எதிரான செயற்பாட்டினை "மூன்றாம் உலகப் போர்" என்றும் சிலர் கூறியுள்ளனர். இந்தக் கிருமிப் போர் பற்றி பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த மாணிக்கவாசக சுவாமிகள் குறிப்பிடுகிறார். அவர் பாடிய திருவாசகத்திலே 225 அடிகளிலே பாடப்பெற்ற "போற்றித் திருவகவல்" என்னும் நெடும்பாட்டிலே மனிதப் பிறப்புப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. தாயின் கருவிலே தொடக்கத்திலிருந்து எத்தனையோ இடர்களிலிருந்து பிழைத்து அக்கரு குழந்தையாகப் பிறக்கும் வரையான நிகழ்வுகளை மணிவாசகப் பெருமான் மிக நுணுக்கமாகக் கூறுகிறார்.

அவர் கல்வி கேள்விகளிலே மிகத் தேர்ந்த அமைச்சராக அரிமர்த்தன பாண்டிய மன்னனின் அவையிலே பணி செய்தவர். **"தென்னவன் பிரம்மராயன்"** என்னும் மிக உயர்ந்த விருதினைப் பெற்றவர்.

இதனால் அவர் பக்திப் பாசுரத்திலே அறிவியல் அடிப்படையான கருத்துகளைத் தெளிவாகக் கூறக் கூடியதாயிருந்தது. போற்றித் திருவகவலில் தாயின் கருவிலே முதல் திங்களில் இருந்து கரு தப்பிப்பிழைப்பதை வருமாறு கூறுகிறார்:

**"மானுடப்பிறப்பினுள்மாதா உதரத்து ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்தும்"** என்று கூறுகிறார். கருவுக்கும் கிருமிக்கும் (நுண்ணங்கிக்கும்) இடையே போர் நடைபெறுகிறது என்பதை "கிருமிச் செரு" என்கிறார். செரு என்றால் போர் என்பது பொருள். இப்பொழுது கொரோனாவை நாம் திட்டித் தீர்ப்பது போலத்தான் மணிவாசகப் பெருமானும்" ஈனமில் கிருமி" என்கிறார்.

இப்பொழுது நாம் எதிர் கொண்டிருக்கும் ஈனமில் கிருமியாகிய கொரோனாவையும் அகற்றுதற்கு இறைவழிபாடும் நமக்குத் துணை செய்யும் என்பதை நாம் மறந்துவிடலாகாது.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2046

### டினு




வாழ்வில் ஒரேயொரு முறை போராடக் கற்றுக் கொண்டால் போதும்... அதன் பின் ஒவ்வொரு முறையும் போராடத் தானே தைரியம் பிறந்து விடும்

### பிரியா



எவ்வளவு மனது காயம்பட்டாலும் சந்தோசம் என்பது நிரந்தரமாகக் கிடைக்கும்... நம்முடைய எண்ணத்தாலும் பொறுமையாலும்

### கவி



என்றும் நீங்கள் நீங்களாக இருங்கள்... விரும்பினால் பழகட்டும் வெறுத்தால் விலகட்டும்

### மதுசா



பசி அடங்கிய பின் கிடைக்கும் உணவும் மனம் வெறுத்த பின் கிடைக்கும் அன்பும் பயனற்றது

### லட்சுமி



காரியம் செய்வது என்று துணிந்து விட்டால் யாரையாவது பகைத்துக்கொள்ளத்தான் வேண்டும். பகையே இல்லாதவன் என்று ஒருவன் இருந்தால் அவன் ஒரு காரியமும் செய்யாதவன் என்று அர்த்தம்

### டினுசா



எதையும் ரசிக்கத் தெரிந்த இடங்களில் தான் சந்தோசம் எந்நேரமும் வசித்துக் கொண்டிருக்கும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கறுப்புப் பணத்தை வெளிக்கொணர கட்டாயம் தேர்தல் தேவை- சிசிர



(கொழும்பு)

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் உள்ள சில அரசியல்வாதிகள் சட்டவிரோதமாக சம்பாதித்த கறுப்புப் பணத்தை தேர்தல் நேரத்தில் சந்தையில் புழக்கத்தில் விடுகின்றனர். இதன் ஊடாக அந்தப் பணத்திற்கு சட்ட ரீதியான அங்கீகாரம் கிடைக்கின்றது.

இவ்வாறு கறுப்புப் பணம் சட்ட ரீதியான பணத்துடன் சேருவதன் ஊடாக நாட்டில் பொருளாதார செயற்பாடுகளுக்கு அந்த பணத்தை பயன்படுத்த முடியும். இதன்மூலம் பொருளாதாரம் வலுவடையும் எனவும் சிசிர ஜயகொடி தெரிவித்தார். (ஐ-4)

# மோட்டார் சைக்கிள் மோதி முதியவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி இமையாணன் பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்டவரை மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டது.

இவ் விபத்து நேற்று முன்தினம் இமையாணன் ஆலடிப் பகுதியில் இடம் பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்தவர் அப்பகுதியை சேர்ந்த துரையன் பசுபதி (வயது-60) மக்களின் உதவியுடன் அம்புலன்ஸ் மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்து தொடர்பாக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (2-5-114)



கண்டாவளை பிரதேச சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் விசுவமடு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பங்களிப்புடன் தர்மபுரம் தொடக்கம் பரந்தன் வரையான ஏ-35வீதியில் துப்பரவுப் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதில் வீதியின் இருமருங்கிலும் காணப்பட்ட உக்கும்,உக்காத கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது. (படம்: முறிகண்டி செய்தியாளர்)

# சிறுத்தைக்கு வலை விரித்தவர் கைது

(மஸ்கெலியா)

லக்சபான வாழைமலை தோட்டத்தில் மிருக வேட்டைக்காக வலையை உருவாக்கியவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் குறித்த தோட்டத்தில் 8 வயதுடைய 8 அடி நீளம் கொண்ட கருஞ்சிறுத்தை ஒன்று வலையில் சிக்குண்ட நிலையில் மீட்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த நபரை கைது செய்து ஹற்றன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். (2-4-5)

# சாவகச்சேரி பொதுச்சந்தையை திறப்பதற்கு முயற்சி முன்னெடுப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தையை எதிர்வரும் முதலாம் திகதி திறப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாக சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் சாவகச்சேரி, நல்லூர், சுன்னாகம் மற்றும் கரவெட்டி ஆகிய சபைகளுக்குச் சொந்தமான பொதுச் சந்தைகள் திறப்பதற்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. ஏனைய பொதுச்சந்தைகளைத் திறப்பதற்கான அனுமதிகள் கிடைத்துள்ளன.

சாவகச்சேரி பொதுச் சந்தையை மீளத் திறப்பது தொடர்பாக மாவட்ட செயலகம் மற்றும் உள்ளூராட்சி திணைக்களம் ஆகியவற்றுடன் கலந்துரையாடல்கள் இடம் பெற்றுள்ளன.

எதிர்வரும் முதலாம் திகதி அளவில் சாவகச்சேரி பொதுச் சந்தையைத் திறப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

பொதுச் சந்தையில் சுகாதாரத்தை கடைப்பிடிக்க ஏற்ற வகையில் நீர்வசதி மற்றும் போதிய இடவசதி ஆகியனவும் காணப்படுகின்றன. அத்துடன் சந்தையில் தொற்று நீக்கும் பணிகளும் இடம்பெற்று வருவதாக மேலும் அவர் தெரிவித்தார். (2-5-30)

## வீடு கையளிப்பு



வவுனியா நெளுக்குளம் ஊர்மிலா கோட்டம் பகுதியைச் சேர்ந்த வறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு கையளிக்கப்பட்டது.வவுனியாவை சேர்ந்த சமூக ஆர்வலர் ரசிக்காபிரியதர்சினியின் 2 இலட்சம் ரூபாய் நிதியில் அமைக்கப்பட்ட வீடு நேற்று கையளிக்கப்பட்டது.

(படம்-நெளுக்குளம் செய்தியாளர்)

# ஆட்டோ விபத்து ஒருவர் காயம்



(வவுனியா)

வவுனியா நீதிமன்றிற்கு முன்பாக நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா பழையபேருந்து நிலையப் பகுதியிலிருந்து வைத்தியசாலை பக்கமாக பயணித்துக் கொண்டிருந்த கனரக வாகனத்துடன்,

பின்னால் வந்த முச்சக்கரவண்டி மோதியதில் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் முச்சக்கரவண்டி கடுமையான சேதமடைந்ததுடன், அதன் சாரதி காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையின் அனுமதிக்கபட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (2-5-299)

# ஐயகோ வட்டுவாகல் பறிபோகிறதே

## ரவிகரன் ஆதங்கம்

(முல்லைத்தீவு)

நான்கு முனைகளால் வட்டுவாகல் கிராமமும் நந்திக்கடலும் அபகரிக்கப்பட்டு வருவதாகவும் எமது வளங்கள் பறிபோய்க் கொண்டிருப்பதாகவும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் எச்சரித்துள்ளார்.

முல்லைத்தீவிலுள்ள அவரது அலுவலகத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை நேற்று நிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மகாவலி எல் வலயத்தின் ஊடாக எப்படி முல்லைத்தீவில் உள்ள காணிகள், அதனுடன் சேர்ந்த நிலங்கள் அபகரிப்புக்குள்ளாகின்றதோ அதேபோல் சத்தமில்லாமல் வட்டுவாகல் கிராமமும் நந்திக்கடலும் பறிபோய்க் கொண்டிருக்கின்றது.

2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு விகாரையும் கிடையாது. 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட போது ஒரு பௌத்த சிங்கள குடும்பம் கூட இல்லாத தமிழ் கிராமமான வட்டுவாகல் கிராமத்தில் தனியாக பெரிய பௌத்த விகாரை அமைத்து, தொல்லியல் திணைக்களம் தமது ஆளுகைக்குள் கொண்டுவரும் நோக்குடன் அதனை செய்துள்ளார்கள்.



அதனை சுற்றி 100 ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டு படைமுகாம் ஒன்று அமைத்துள்ளார்கள். கடற்படை தளம் ஒன்று 617 ஏக்கர் நிலத்தில் அமைத்துள்ளார்கள். வட்டுவாகல் கடற்படைதளம் வட்டுவாகல் முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியைச் சேர்ந்த மக்களின் காணிகள் கடற் படையினரால் அபகரிக்கப்பட்டு பாரிய கடற்படைத்தளம் அமைக்கப்பட்டுள்ளது.


2010 ஆம் ஆண்டிற்குப்பின்னர் சுற்றிவளைத்து நான்கு பகுதியாலும் வட்டுவாகல் கிராமம் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

பல வடிவங்களில் தமிழர்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக முழுமையாக நம்பி இருக்கும் நந்திக்கடல், ஒருபகுதி கடற்படை ஆக்கிரமிக்க, மறு பகுதி படையினர் ஆக்கிரமிக்க வனஜீவராசிகள் திணைக்களமும் தொல்லியல் திணைக்களமும் தமிழர்களை விழுங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4-281)

# சுதந்திரத்திற்குப் பின்
# இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

03

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



தேர்தல் தொகுதிகளுக்கான எல்லைகள் அக்காலத்தில் காணப்பட்ட நிர்வாக பிரிவுகளின் எல்லைகளை மாத்திரம் கருத்திலெடுத்து நிறுவப்பட்டமையால் அவ்வாறு நிறுவப்படுகின்ற தொகுதிகளில் இடப்பரப்பு மற்றும் சனத்தொகையின் அளவீடு தொடர்பாக அக்கறை காட்டப்படாமை காரணமாக அவற்றின் வாக்காளர்களின் எண்ணிக்கையிலும், இடப்பரப்பிலும் பெருமளவிலான வித்தியாசங்களைக் காணமுடிந்தது. இவ்வாறு தொகுதிகளிடையே வாக்காளர்களின் எண்ணிக்கையில் வித்தியாசம் ஏற்படுவதற்கு அந்தந்த தொகுதியில் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படுவதற்கு நபர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தகைமைகளின் பன்மைத்துவமும் செல்வாக்கும் காரணங்களாக விளங்கின. சில தேர்தல் தொகுதிகள் குறிப்பாக ஏதேனுமொரு இனத்தினருக்குரித்தான பிரதிநிதிகளை மாத்திரம் தேர்ந்தெடுப்பதற்காக குறித்தொதுக்கப்பட்டிருந்தமையும் அப்போது காணமுடிந்த ஓர் இயல்பாகவிருந்தது.

அரச பேரவைத் தேர்தலுக்காக தேர்தல் தொகுதிகளை நிறுவுவதற்கு 1931ஆம் ஆண்டில் வேறானதொரு எல்லை நிர்ணய ஆணைக்குழு அமைக்கப்பட்டது. அவ்விடயத்திற்காக வருமான கட்டுப்பாட்டுப் பிரிவுகள், கிராம பிரதானிகளுக்கான பிரிவுகள், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான நீதிமன்ற அதிகார எல்லைகள் போன்ற நிர்வாக அலகுகளின் எல்லைகளை அடிப்படையாகக் கொள்வதற்காக நடவடிக்கையெடுக்கப்பட்டது. தவிசாளர் ஒருவரையும் இரண்டு அங்கத்தினர்களையும் கொண்டிருந்த அவ்வாணைக்குழு ஆளுநரினால் நியமனம் செய்யப்பட்டது. மாகாணங்களை அடிப்படையாகக் கொண்ட அத் தேர்தல் தொகுதிகளின் பிரிவுகளுக்கேற்ப வேறு பிரிக்கப்பட்ட தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 50 ஆகவிருந்தது.

அதனைத் தொடர்ந்து 1933.08.11 ஆம் திகதி மீண்டும் மூன்று அங்கத்தினர்களை உள்ளடக்கிய தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றூடாக தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அச்சந்தர்ப்பத்தில் ஆரம்பத்தில் காணப்பட்ட அரசபேரவைத் தேர்தல்தொகுதிகள் பலவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பது மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றத்திற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல்களை நடத்துவற்குரிய தேர்தல் தொகுதிகள் தாபிக்கப்பட்டமை அதனை தொடர்ந்தே நிகழ்ந்தது. இதற்காக 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியல் அமைப்பு) அரசகட்டளையின் 76ஆம் உறுப்புரையின் கீழ் ஆளுநரினால் நியமனம் செய்யப்பட்ட தேர்தல்தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழு மூன்று அங்கத்தினர்களை உள்ளடக்கியிருந்தது. இவ்வாணைக்குழுவின் பணிகள் 41 மற்றும் 76 ஆம் உறுப்புரைகளினால் தெளிவுபடுத்தப்பட்டிருந்தன. இறுதியான மக்கள் தொகைக்கணிப்பீட்டுக்கமைய 9 மாகாணங்களிலும் 75,000 சனத்தொகைக்கு ஒரு தொகுதி வீதமும், மாகாணத்தின் பரப்பளவிற்கமைய 1000 சதுரமைல் பரப்பளவிற்கு ஒரு தொகுதி என்ற வகையிலுமாக இரண்டு விதங்களில் ஒரு மாகாணத்திற்கான தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையை உரிய ஆணைக் குழு தீர்மானிக்க வேண்டியிருந்தது. அந்தந்த மாகாணத்தின் பரப்பளவிற்கேற்ப உரித்தான உறுப்புரிமைகளின் எண்ணிக்கை 41(2) உறுப்புரையில் காட்டப்பட்டிருந்தது. அவற்றின் மொத்த எண்ணிக்கை 25 ஆகும். தொகுதிகளை வேறு பிரிக்கின்ற போது வதிவாளர்களின் சமூக மற்றும் இனக்குழும இயல்புகளை கருத்திலெடுத்து .தேர்தல் தொகுதிகளை வேறு பிரிப்பதற்கும் சட்ட ஏற்பாடுகள் கொண்டுவரப்பட்டிருந்தன. அச்சந்தர்ப்பத்தில் நிறுவப்பட்ட மொத்த தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 89 ஆகும். பல் அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளையும் உள்ளிட்ட வகையில் இத் தொகுதிகளிலிருந்து தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 95 ஆகும். இவ்வாணைக்குழுவின் பரிந்துரைக்கமைய 5 பல் அங்கத்தவர் தொகுதிகளும் நிறுவப்பட்டதோடு, கட்டளைச் சட்டத்தின் பதினோராம் உறுப்புரைக்கமைய தேர்தலின் பின்னர் ஏதேனுமொரு இனக் குழுமத்திற்குத் தேவையானளவு பிரதிநிதித்துவம், பிரதிநிதித்துவ சபைக்குள் காணப்படுவதில்லையென ஆளுநர் கருதுவாராயின் அவருக்கு தனது தற்றுணிபுக்கிணங்க இன்னும் 6 உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கு இடமளிக்கப்பட்டமையால் பிரதிநிதிகள் சபையின் மொத்தப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 101 ஆகவிருந்தது.

இலங்கைப் பாராளுமன்றம்



அவ்வரசியல் அமைப்பின் கீழ் நிகழ்ந்த அடுத்த பாராளுமன்றத் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் 1959 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. அரசியல் அமைப் பின் 76ஆம் உறுப்புரைக்கமைய அமைக்கப்பட வேண்டிய தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையின் அதிகூடிய மட்டுப்பாடு தொடர்பான விதி இச்சந்தர்ப்பத்தில் நீக்கப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் தேர்தல் தொகுதிகளைப் பிரித்தொதுக்குகையில் கருத்திலெடுக்க வேண்டியிருந்த "ஆட்களின் எண்ணிக்கை" என்பதற்குப் பதிலாக "இலங்கை பிரஜைகளின் எண்ணிக்கை" என்பதை ஏற்புடைத்தாக்கிக் கொள்ளவேண்டுமென இம்முறை ஆணைக்குழுவிற்கு கட்டளையிடப்பட்டது. 1959ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை (அரசியலமைப்பு) திருத்தச்சட்டத்தின் காரணமாக இம்முறை ஆணைக்குழுவின் பணிகள் மாற்றத்திற்கு இலக்காகின. இவ்வாணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய முழு நாடும் 145 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டதோடு, இதில் 5 பல் அங்கத்தவர் தொகுதிகளும் உள்ளடக்கப்பட்டன. பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கென விதிக்கப்பட்ட மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 151 ஆகவிருந்தது.

1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பின் 77 முதல் 81 வரையிலான உறுப்புரைகள் மற்றும் 1975 பெப்ரவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட முதலாம் அரசியலமைப்பு திருத்தம் ஆகியவற்றின் காரணமாக தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயத்திற்காக அதுவரை 1946 ஆம் ஆண்டின் அரசியலமைப்புக்கமைய ஏற்புடையதாக காணப்பட்ட விதிகள் ஓரளவு மாற்றமடைந்தன. இம்முறை 90,000 பிரஜைகளுக்கு ஒரு தொகுதியை அமைக்க வேண்டுமென விதிக்கப்பட்டிருந்தது. இத்தகைய திருத்த நிலைமைகளுக்கமைய 1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயத்திற்கமைய 6 பல் அங்கத்தவர்கள் தொகுதிகளையும் உள்ளடக்கிய 160 மொத்த தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 168 ஆகவிருந்தது.

1978ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் 95 ஆம் உறுப்புரைக்கமைய 1978 நவம்பர் மாதம் நியமனம் செய்யப்பட்ட தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு அவ்வரசியலமைப்புக்கமைய ஒருமுறை மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்ற தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயப் பணிகளில் ஈடுபட வேண்டியிருந்தது.

முந்திய சந்தர்ப்பங்களோடு ஒப்பிடுகையில் இலங்கையின் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல்முறை செயற்படுவதற்கு அடிப்படையான தேர்தல் மாவட்டங்களை பிரித்தொதுக்குவதற்கு கட்டளையிடப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இச் சந்தர்ப்பம் விளங்கியமை ஒரு விசேட மான விடயமாகக்காட்டப்பட முடியும்.

மாகாண எல்லைகளைக் கருத்திலெடுத்து மாகாணங்களில் அமையப் பெற்றுள்ள நிர்வாக மாவட்டங்களின் எல்லைகள் மாற்றமடையாதவாறு முழு நாடும் 20 இற்குக் குறையாததும் 24ஐ விஞ்சாததுமான தேர்தல் மாவட்டங்களாகப் பிரித்தொதுக்கப்பட்டு, அவற்றை அடையாளம் காண்பதற்கான இலக்கமொன்றையும் பெயர் ஒன்றையும் வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகளும் காணப்பட்டன. மாகாணத்தில் அமைக்கப்படுகின்ற தேர்தல் மாவட்டங்களிடையே 4 உறுப்பினர்கள் நியாய பூர்வமாக பகிர்ந்தளிப்பட வேண்டியிருந்தது. அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 36 ஆகவிருந்தது.

வேறு எந்தவோர் அளவீடும் தேர்தல் தொகுதி பகிர்ந்தளிப்பு தொடர்பான உரிய அரசியல் அமைப்பு ஏற்பாடுகளுக்குள் இம்முறை உள்ளடக்கப்படாமை விசேடமான ஒரு சிறப்பியல்பாகும். அதற்குப் பிரதான காரணம் அரசியல் அமைப்பின் 98(8) ஆம் உப உறுப்புரைக்கமைய பாராளுமன்றத்தில் உள்ளடக்கப்படுகின்ற 160 உறுப்பினர்களும் தேர்தல் எல்லை நிர்ணய ஆணைக் குழுவினால் நிறுவப்படுகின்ற தேர்தல் மாவட்டங்களிடையே பகிர்ந்தளிக்கப்படும் விதம் தேர்தல்கள் ஆணையாளரினால் ஒவ்வோர் ஆண்டும் வாக்காளர் கணக்கெடுப்பின் பின்னர் தேர்தல் மாவட்டங்களின் வாக்காளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையேயாகும்.

### இலங்கைப் பாராளுமன்றம்

இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கேற்ப இலங்கைச் சட்டவாக்கச்சபை (பாராளுமன்றம்) காலத்துக் காலம் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டது.

(தொடரும்)

# 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கு!

## சிங்கள சட்டத்தரணி சி.ஐ.டியில் முறைப்பாடு

(கொழும்பு)

**கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்குகளில் முன்னிலையான சிங்கள சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப் படுவதாக சி.ஐ.டியில் முறையிட்டார்.**



கடந்த 22 ஆம்திகதி அவர் இந்த முறைப்பாட்டைச் செய்தார். அத்துடன், கடந்த வருடம் தான் செய்த முறைப்பாடு தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து தனது புகைப் படங்களை பாவித்து அவதூறு செய்வது குறித்து குற்றவியல் பிரிவு கணனி குற்ற விசாரணைப்பிரிவுப் பொறுப்பதிகாரிக்கு கடிதம் மூலம் அவர் முறையிட்டார்.

அதில் 30.04.2017 அன்று சி 192/19 இலக்க முறைப்பாடு தொடர்பாக பொலிஸார் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமலிருப்பது வருத்தமளிப்பதாகவும் அந்தக் கடிதத்தில் அவர் சுட்டிக் காட்டினார்.

தனது அடிப்படை மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதி செய்ய வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்.

மேலும் முன்னாள் பாதுகாப்பு பிரதானி ரவீந்திர விஜேகுணரட்ண தொடர்புபட்ட வழக்கான கடற்படையினரால் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் போன வழக்கு, மீதொட்டமுல்ல குப்பைமேட்டில் கடத்தப்பட்ட இளைஞனின் சடலம் மீட்கப்பட்ட வழக்கு, கொட்டஹேனாவில் இருவர் கடத்தப்பட்ட வழக்கு, வெலிக்கடை சிறைக் கைதிகள் கொலை, சட்டத்தரணி மேஜர் அஜித் பிரசன்ன தொடர்புடைய நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஆகியவற்றில் அச்சலா செனவிரத்னவே முன்னிலையாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 268 இலங்கையர்கள் கட்டாரிலிருந்து அழைத்து வரப்பட்டனர்

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்துவரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் குறித்த நடவடிக்கை இடை நிறுத்தப்படுவதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் இருந்து அழைத்து வரப்பட்டவர்களில் பலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து குறித்த நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கட்டாரில் தங்கியிருந்த 268 இலங்கையர்களை அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து கட்டாரில் தங்கியிருந்த 268 இலங்கையர்கள் நேற்றுக்காலை ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானம் ஒன்றின் மூலம் அழைத்து வரப்பட்டனர்.

இவ்வாறு வந்திறங்கிய இலங்கையர்கள் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச்செல்லும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ஜ-4)

# திவிநெகும நிதி மோசடி விவகாரம்; பசிலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட நான்கு பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மேலதிக விசாரணை செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான 2.991 பில்லியன் ரூபாய் நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பா ஜானகி ராஜரத்ன முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரர்கள் சார்பில் ஆஜராகும் ஜனாதிபதி சட்டத்தரணிகள் சிலர் உயர் நீதிமன்ற வழக்கில் ஆஜராகியமையால் இவ்வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான நிதியைப் பயன்படுத்தி கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கூரைத்தகடுகள் விநியோகித்தமை உள்ளிட்ட 5 குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபரால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக, திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க மற்றும் அதன் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி ஆகியோர் குற்றவாளிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். (ஜ-4)

# தேன் எடுக்கச் சென்ற மாணவன் மரக்கிளையில் சடலமாக மீட்பு!

(திருமலை)

திருகோணமலை - பன்மதவாச்சி காட்டுக்குள் தேன் எடுக்கச் சென்ற மாணவன் ஒருவர் நேற்றுக் காலை மரக்கிளை குத்தி உயிரிழந்தார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருந்த நிலாவெளி மகாவித்தியாலய மாணவனே இந்தச் சம்பவத்தில் பரிதாபமாக உயிரிழந்தார்.

தேன் எடுக்கச் சென்ற மூவரில் ஒருவரான குறித்த மாணவன், சுமார் 16 அடி உயரமான மரம் ஒன்றில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார். பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உயர்ந்த பண்பு

அடுத்தவர்கள் பூமியை நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்கிற காரணத்திற்காகத்தானே தேசங்கள் சண்டை போட்டுக் கொள்கிறது.

அப்படி ஒரு போர் நடந்து கொண்டிருந்த சமயம் பிரெஞ்சுத் துருப்புக்கள் ஜேர்மனியிலே முகாமிட்டார்கள். அவர்கள் படையிலே நிறையக் குதிரைகள் உண்டு. அதுக்கெல்லாம் ஆகாரம் தேவைப்பட்டது. புது இடம் என்ன செய்வது என்று யோசித்தார் படைத்தலைவர்.

ஒரு படைப்பிரிவின் அதிகாரியைக் கூப்பிட்டார். குதிரைகளுக்குத் தேவையான புல்லைக் கொண்டு வரும்படி ஆணையிட்டார். உடனே அந்த அதிகாரி தன்னிடம் இருந்த படை வீரர்களை அழைத்துக்கொண்டு புறப்பட்டார்.

ஒரு குறிப்பிட்ட இடத்துக்குப் போனார். அங்கே மரங்கள் மட்டுத்தான் இருந்தன. அந்தப் பகுதி ஒரு சிறிய பள்ளத்தாக்கு. சுற்றிலும் குன்றுகள். கொஞ்சத் தூரத்திலே ஒரு குடிசை தெரிந்தது. எல்லாரும் அங்கே போனார்கள்.

அந்த அதிகாரி தன்னுடைய படை வீரர்களிலே ஒருத்தனை விட்டு அந்தக் குடிசையின் கதவை தட்டச் சொன்னார். குடிசையின் கதவு திறந்தது.

வெள்ளைத் தாடியோடு ஒரு வயதான தாத்தா வெளியிலே வந்தார். படைத்தலைவர் அவரைப் பார்த்து...பெரியவரே! எங்க குதிரைகளுக்கு புல் தேவைப்படுகிறது. இந்தப் பகுதியிலே புல் எங்கே கிடைக்கும்? இடத்தைக் காட்டுங்கள், நாங்கள் அறுத்துக் கொள்கிறோம் என்றார்.

சரி...என்னோடு வாருங்கள் என்று சொல்லி அந்தத் தாத்தா புறப்பட்டார். அவர் பின்னாலேயே இவர்கள் எல்லோரும் புறப்பட்டார்கள். அந்தத் தாத்தா அவர் பாட்டுக்கு காடு மேடு எல்லாம் நடந்து போய்க்கொண்டிருந்தார். இவர்களும் பின்னால் போய்க்கொண்டிருந்தார்கள்.

ஒரு மணி நேரம் நடந்திருப்பார்கள். வழியிலே ஒரு புல் நிலம் இருந்தது. படைத் தலைவர் அந்த இடத்தைப் பார்த்ததும் "இது போதுமே. இந்த இடத்திலேயே புல் அறுத்துக் கொள்ளலாம்" என்றார். "இங்கே வேண்டாம். இன்னும் கொஞ்சத்தூரம் போக வேண்டும். கொஞ்சம் பொறுத்துக்கொண்டு என் பின்னாலேயே வாருங்கள்" என்று சொல்லிக்கொண்டு போய்க்கொண்டே இருந்தார்கள்.

அடுத்தபடியாகவும் புல் அறுத்துக்கொள்வதற்கு வசதியாக இரண்டு மூன்று இடம் இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் அதெல்லாம் வேண்டாமென்று சொல்லி வேறு ஒரு புல் நிலத்துக்கு இவர்களை எல்லாம் அழைத்துக்கொண்டு போனார்.

"அங்கே ஒரு நிலத்தைக் காட்டி இதிலே புல் அறுத்துக் கொள்ளுங்கள்" என்றார். உடனே அந்தப் படை வீரர்கள் எல்லாம் புல்லை அறுத்து மூட்டை கட்டிக்கொண்டார்கள். அதன் பின்பு குதிரை மேலே ஏறிப் புறப்பட்டார்கள்.

அந்தச் சமயத்திலே அந்த படைத்தலைவர் இந்த தாத்தாவைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்.

"பெரியவரே அநாவசியமாக எங்களை இவ்வளவு தூரம் கூட்டிக்கொண்டு வந்தீர்களே...அங்கேயே வருகிற வழியிலே புல் நிலங்கள் நிறைய இருந்ததே. அதிலேயே புல்லை அறுத்திருக்கலாமே" என்றார்.

இதற்கு அந்த தாத்தா சொன்னார்... "உண்மைதான். ஆனால் அந்த நிலமெல்லாம் என்னுடையது இல்லை. இது தான் என்னுடைய நிலம்" என்றார்.

பெரியவருடைய இந்தப் பண்பு அந்த அதிகாரியை ஆச்சரியப்பட வைத்து விட்டதாம். (பிரெஞ்சு எழுத்தாளர் பெர்னார்தென் தெசென் பியேர் என்பவர் எழுதின ஒரு குட்டிக்கதை இது).

இந்தப் பண்பு நம்மிலே எத்தனை பேரிடம் இருக்கு?

அடுத்தவன் நிலத்தை காட்டி அறுத்துக்கொண்டு போ என்று சொல்கிறவர்கள்தான் அதிகம்.

நம்ம ஆள் ஒருத்தன் ஒரு குதிரை வைத்திருந்தான். அதை எந்த நேரமும் வண்டியிலே பூட்டி நிறுத்தியேதான் வைத்திருப்பான். இரவு-பகலாக அப்படியே நின்றுகொண்டிருக்கும். தரையிலே படுக்க விடுவதில்லை. இதைப் பார்த்துவிட்டு பரிதாபப்பட்டு ஒருத்தர் சொன்னார்...

"உனக்கு ஜீவகாருண்யம் இல்லையா? எப்போது பார்த்தாலும் உன் குதிரையை வண்டியிலேயே பூட்டி நிறுத்தி வைத்திருக்கிறாயே! அவிழ்த்து விடக் கூடாதா?" என்றார்.

"குதிரையை அவிழ்த்து விட்டால் பொத்தென்று கீழே விழுந்துவிடும் சேர். அதுக்கு ஒரு ஆதார பலம் வேணும் என்பதற்காகத்தான் பூட்டி வைத்திருக்கிறேன்" என்றான்.

உள்ளத்தில் ஒழுங்கு முற்றிலும் குறைந்திருந்தால் நாம் புறத்தில் எதையும் நிலைநாட்ட முடியாது.
- ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# வடக்கு ஆளுநர் அலுவலக வாஸ்து பிழை போலும்

வடக்கு மாகாணத்தின் ஆளுநர் பதவி என்பது அல்லாடும் பதவியாகவே இருந்து வருகிறது.

இராணுவ அதிகாரியாக இருந்தவர்களை ஆளுநராக நியமிக்கின்ற ஒரு நடைமுறை இருந்தபோது, அதனைத் தமிழ் மக்களும் தமிழ் அரசியல் தரப்புகளும் எதிர்த்தன.

இதன் காரணமாக இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த பலிகக்கார என்பவர் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

நல்ல மனிதர், சிறந்த நிர்வாகி எனக் கூறக் கூடிய அவரை; தமிழ்த் தரப்பு தக்கபடி பயன்படுத்தவில்லை. ஆட்சியாளர்களும் உள்விருப்பு வேறாக இருந்ததால் அவரை எப்படியும் நீக்க வேண்டும் என்ற நினைப்போடு இருக்க, அவர் ஒருவருடப் பூர்த்தியோடு ஆளுநர் பதவியில் இருந்து நீங்க வேண்டியதாயிற்று.

இப்போது தமிழர் ஒருவரை ஆளுநராக நியமியுங்கள் என்ற கோரிக்கை பொதுவெளியில் வலிமை பெற்றபோது தமிழ் தெரிந்த றெஜினோல்ட் கூரே நியமிக்கப்பட்டார்.

வடக்கு மக்களின் ஆளுநர் என்பதைவிட தன்னை நியமித்த தரப்புக்குத்தான் விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த கூரே, மக்கள் சந்திப்புக்களில் அரசியல் கலந்த உரைகளை ஆற்றத் தவறவில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழர் ஒருவர் ஆளுநராக வர வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரிக்க முடியாத கட்டத்தில், தமிழராகவும் அதேவேளை தனது தத்துவமாணிப் பட்டத்துக்காக பௌத்த மதத்தை ஆய்வு செய்தவருமான சுரேன் ராகவன் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

எனினும் அவரின் பதவிக்காலம் ஒரு வருடத்தை நிறைவு செய்வதற்கு முன்னதாக நின்று போனது.

அதன் பின்னர் புதிய ஆளுநரை நியமிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது.

யாரெல்லாம் ஆளுநராக வர முடியும் என்றொரு பட்டியல் அவரவர் விருப்பப்படி நாளுக்கு நாள் ஊடகங்களை அலங்கரிக்க ஈற்றில் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் நியமிக்கப்பட்டார்.

பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதைகளுடன் ஆளுநராகப் பதவியேற்ற அவரின் பதவிக்காலம் சில மாதங்களைத் தாண்டுவதற்கு முன்னதாக அவருக்கும் மாற்றம் வரலாம் என்றும் புதிய ஆளுநராக இராணுவ அதிகாரியாக இருந்த ஒருவர் நியமிக்கப்படலாமென்றும் பரவலாகப் பேசப்படுகிறது.

இவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பழைய பூங்கா வளாகத்தில் அமையப் பெற்ற ஆளுநர் அலுவலகத்து வாஸ்து பிழையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

# வேட்புமனுத் தாக்கல் செய்தோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை- ஐ.தே.க.

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் வேறு அரசியல் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்று வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர் என்றும் கட்சியின் செயற்குழுவிற்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்காமல் இவ்வாறு செயற்படுவது கட்சி யாப்பை மீறும் செயலாகும் என்றும் எனவே கட்சியாப்பை மீறிச் செயற்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் ஐ.தே.க.பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று புதன்கிழமை விசேட அறிக்கையொன்றை அவர் வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் வேறு அரசியல் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்று வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

வேறு அரசியல் கட்சி ஊடாக வேட்பாளராக வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள அல்லது செய்யவுள்ள எந்தவொரு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரும் கட்சி யாப்பின் 3(உ) உறுப்புரைக்கு அமைய கட்சியின் செயற்குழுவின் உத்தியோகபூர்வ அனுமதியைப் பெற வேண்டும்.

சர்ச்சைக்குரிய உறுப்பினர்கள் யாரும் மேற்கூறப்பட்ட கட்சி யாப்பின் 3(உ) உறுப்புரைக்கு அமைய செயற்படவில்லை என்பதோடு அவர்கள் கட்சியின் செயற்குழுவின் அனுமதியையும் பெறவில்லை.

அவ்வாறு கட்சி யாப்பை மீறி செயற்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு எதிராக, யாப்பின் 3(h) உறுப்புரையின் கீழ் நீண்டகாலமாகக் காணப்படும் கட்சியைப் பாதுகாப்பதற்காக கட்சித் தலைமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டியேற்பட்டுள்ளது.

இதுவரையில் வேறு கட்சிகளின் அங்கத்துவத்தைப் பெற்று வேட்பாளராக வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள பல உறுப்பினர்கள் இந்தத் தீர்மானம் தொடர்பில் ஆராய்ந்து மீண்டும் எம்முடன் இணைவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் கட்சி யாப்பின் 3(h) உறுப்புரையின் கீழ் வேறு கட்சிகள் சார்பில் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களிடம் அது தொடர்பில் விளக்கம் கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த உறுப்பினர்களால் அறிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் தினங்களில் கூடவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அமர்வுகளில் பொருத்தமான தீர்மானம் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# தேர்தல் ஆணைக்குழுவிற்காக ஜனநாயக உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது

## வாசுதேவ திட்டவட்டம்

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக் குழு குறிப்பிடும் அனைத்து விடயங்களுக்கும் அடிபணிய முடியாது என்றும் அத்துடன் ஜனநாயக உரிமைகளை ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மைக்காக விட்டுக் கொடுக்கவும்முடியாது என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

5 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படுவதில் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. அரச அதிகாரிகளை இவ்விடயத்தில் இணைத்துக்கொள்ள வேண்டாம் என தேர்தல்கள் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக் குழு குறிப்பிடும் அனைத்து விடயங்களுக்கும் அரசாங்கம் அடிபணிய வேண்டிய தேவை கிடையாது. ஆணைக குழுவின் சுயாதீனத்தன்மைக்காக ஜனநாயக உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது. ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் அரசாங்கம் ஒருபோதும் தலையிடாது. கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட துறைகளின் நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்பட்டன. எனவே அனைவரும் பாதுகாப்பான முறையில் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# உயிரிழந்தவர்களை நினைவுகூர ஸ்பெயினில் துக்கதினம் அனுஷ்டிப்பு

(மாட்றிட்)

கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் ஸ்பெயினில் 10 நாட்கள் துக்கதினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

நேற்று முதல் துக்கதினம் அனுஷ்டிக்கும் முகமாக தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது.

கொரோனாத் தொற்றால் இதுவரை ஸ்பெயினில் 27 ஆயிரத்து 117 பேர் வரை உயிரிழந்தனர்.

2 இலட்சத்து 83 ஆயிரத்திற்கும் அதிகமானோர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

கொரோனா வைரஸால் அதிக உயிரிழப்புக்களைச் சந்தித்த நாடுகள் பட்டியலில் ஸ்பெயினும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தலை மீறி

# கொரோனாவுக்கு மலேரியா தடுப்பு மருந்தை பயன்படுத்த இந்தியா தீர்மானம்

(டில்லி)

மலேரியா தடுப்பு மருந்துவில்லைகளான ஹைறொக்சி குளோரோகுயினை கொரோனாத் தொற்றுத் தடுப்புக்கென பயன்படுத்த இந்தியா தீர்மானித்துள்ளது.

கொவிட்-19 தடுப்பு மருந்தாக ஹைறொக்சி குளோரோகுயினை பயன்படுத்துவதாக அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இதையடுத்தே குறித்த மருந்தை தொற்றாளர்களுக்கு பயன்படுத்துவதற்கான ஒப்புதலை இந்திய மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு வழங்கியது.

எனினும் குறித்த மருந்துத் தொற்றாளர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தலாம். எனவே அதை உபயோகிக்க வேண்டாம் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**ஒரே நாளில் செல்வந்தனாக வேண்டுமென்று விரும்புகிறவன் ஒரே ஆண்டில் வறுமையின் பிடியில் சிக்குவான்.**
*- டாவின்சி*

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கோம்பாவில் இரணைப்பாலை, சிவநகர், புதிய குடியிருப்பு, கிழவன் குளம், பனிக்கன்குளம், மாங்குளம், மாங்குளம் நீதிமன்றம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** கோவில்குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம், துட்டுவாகை, கிறிஸ்தவ குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# சத்திய தரிசனம்

## நல்லதையே தேர்ந்தெடுங்கள்



❖ தேடிய செல்வத்தால் வாழ்வு வளம் பெறும். சேர்த்து வைத்த புண்ணியம் வாழ்விற்கு பாதுகாப்பு தரும்.

❖ உலகில் நன்மையும், தீமையும் கலந்தே இருக்கிறது. நீங்கள் நல்லதை மட்டுமே தேர்ந்தெடுங்கள்.

❖ தனிமனிதனின் ஒழுக்கம் சமுதாய ஒழுக்கத்திற்கு அடிப்படை. அதனால், ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கத்துடன் வாழ கடமைப்பட்டிருக்கிறான்.

❖ ஏட்டுப்படிப்பை பெறுவது கல்வியாகாது. ஆன்மிக வாழ்வில் ஈடுபட்டு ஞானத்தை அடைவதே உயர்ந்த கல்வி.

❖ அன்பு, நல்லொழுக்கம், உயிர்களிடம் கருணை ஆகிய குணங்களைக் கொண்ட மனிதன் சொர்க்கத்தில் வாழும் பேறு பெறுகிறான்.

❖ கல்லிலே கடவுளைக் காண முயற்சிக்க வேண்டுமே ஒழிய, கடவுளைக் கல்லாக்க முயற்சிக்கக் கூடாது.

❖ சரியான டிக்கெட்டும், ரயிலும் கிடைத்து விட்டால் ஊர் போய்ச் சேரலாம். தெளிந்த அறிவும், சாஸ்திர ஞானமும் இருந்து விட்டால் லட்சியத்தை அடையலாம்.

# தலிபான்களை கனிய வைக்கும் கனி; 900 கைதிகளை விடுதலை செய்தார்

(காபூல்)

ஆப்கானில் முதற்கட்டமாக 900 தலிபான் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளுக்கும், அந்த நாட்டு அரசுக்கும் இடையே 19 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது.

இப்போரை முடிவுக்குக் கொண்டு வர ஜனாதிபதி அஷ்ரப் கனி தலைமையிலான அரசு தீவிர முனைப்புக் காட்டி வருகிறது. அதன்படி தலிபான் பயங்கரவாதிகளுடன் ஒரு சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்த அந்த அமைப்புடன் அரசு நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இந்தப் பேச்சுவார்த்தையின் ஒரு அங்கமாக ஆப்கானிஸ்தான் சிறைகளில் உள்ள 5 ஆயிரம் கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தத்தில் ஜனாதிபதி அஷ்ரப் கனி கடந்த மாதம் கையெழுத்திட்டார்.

அந்த அடிப்படையில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஒவ்வொரு தொகுதியாக தலிபான் கைதிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

இதற்கிடையே, ரம்ழான் பண்டிகையை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை தலிபான் பயங்கரவாதிகள் 3 நாள் போர் நிறுத்தத்தை அறிவித்தனர். அதனை தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை பக்ராம் சிறையில் இருந்து 100 தலிபான் கைதிகளை அரசு விடுதலை செய்தது.



இதனிடையே போர் நிறுத்தத்தை மேலும் 4 நாட்களுக்கு நீடித்துள்ளதாக தலிபான் பயங்கரவாத அமைப்பு அறிவித்தது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் நாட்டில் இதுவரை இல்லாத அளவில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 900 தலிபான் கைதிகள் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக, இராணுவ செய்தித் தொடர்பாளர் ஜாவித் பைசல் கூறுகையில், தலிபான்களின் போர் நிறுத்தத்துக்கு மதிப்பளிக்கும் வகையிலும், சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் விதமாகவும் 900 தலிபான் கைதிகள் விடுவிக்கப்பட்டு உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (2-5)

## இரு முகங்களுடன் பிறந்த பூனைக்குட்டி



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஓரிகன் மாகாணத்தில் இரண்டு முகங்களுடன் பிறந்த அதிசயப் பூனைக் குட்டி ஒன்று பிறந்து மூன்று நாட்களின் பின் உயிரிழந்துள்ளது.

ஒரு பூனைக்கு பிறந்த ஆறு பூனைக்குட்டிகளில் இரு முகங்களுடன் பிறந்த பூனைக்குட்டியும் ஒன்றாகும். அதற்கு, இரண்டு மூக்கு, இரண்டு வாய், நான்கு கண்கள் இருந்தன.

ஏதேனும் உணவு அளிக்கும்போது அது இரண்டு வாய்களையும் திறக்குமாம். எனினும் குறித்த பூனை பிறந்து மூன்றாம் நாள் இறந்து விட்டது. (2-5)

## ஆயிரம் பேரைப் பலியெடுத்தும் அடங்காத கொரோனா

### பிரேஸிலில் தொடரும் துயரம்

(ரியோ டி ஜெனிரோ)

பிரேஸிலில் கொரோனா வைரஸ் தொற்றில் சிக்கி ஒரே நாளில் மீண்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர். கொரோனா வைரஸின் தாக்கம் உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனா தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

அமெரிக்காவைத் தொடர்ந்து, பிரேஸில் இரண்டாம் இடத்தில் உள்ளது. அங்கு, ஒரே நாளில் 15 ஆயிரத்து 691 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் மொத்தமாகப் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 3 இலட்சத்து 90 ஆயிரத்தை கடந்துள்ளது.

இதேபோல், பிரேஸிலில் கொரோனா வைரஸ்க்கு ஒரே நாளில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியானார்கள். இதையடுத்து, மொத்த பலி எண்ணிக்கை 24 ஆயிரத்து 500ஐ தாண்டியுள்ளது. (2-5)

## அமெரிக்காவில் ஒரு இலட்சத்தை தாண்டியது பலி



(நியூயோர்க்)

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத் தாண்டியுள்ளது. உலகம் முழுவதும் தற்போதைய நிலவரப்படி 56 இலட்சத்து 44 ஆயிரத்துக்கும்மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வைரஸ் தொற்றுக்குட்பட்டவர்களில் 28 இலட்சத்து 84 ஆயிரத்துக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 53 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கொரோனா பரவியவர்களில் 24 இலட்சத்து 8 ஆயிரத்துக்கும் அதிகமானோர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்து வெளியேற்றியுள்ளனர். ஆனாலும், வைரஸ் தாக்குதலுக்கு உலகம் முழுவதும் இதுவரை 3 இலட்சத்து 49 ஆயிரத்து 900 இற்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

சீனாவின் வுஹான் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் கடந்த சில மாதங்களாக அமெரிக்காவை புரட்டி எடுத்து வந்தது. வைரஸ் பரவியவர்கள் பலி எண்ணிக்கையில் உலக அளவில் அமெரிக்கா முதலிடத்திலுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

தற்போதைய நிலவரப்படி, அந்நாட்டில் வைரஸ் தொற்று பாதிப்பு எண்ணிக்கை 17 இலட்சத்து 13 ஆயிரத்தைக் கடந்துள்ளது. மேலும் கொரோனாவில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 4 இலட்சத்து 69 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. (2-5)

## சீனாவின் எதிர்ப்பை மீறி வீதிப் பணியில் இந்தியா

(டில்லி)

இந்திய-சீன எல்லையில், சீனாவின் எதிர்ப்பை மீறி வீதிப்பணிகளைத் தொடர இந்தியா முடிவு செய்துள்ளது.

அருணாசல பிரதேசத்தை முழுவதுமாக சொந்தம் கொண்டாடும் சீனா, லடாக்கின் சில பகுதிகளையும் சொந்தம் கொண்டாடி வருகிறது. அதனால்தான், லடாக்கை யூனியன் பிரதேசமாக இந்தியா அறிவித்தபோது, அதற்கு சீனா எதிர்ப்பைத் தெரிவித்தது.

கிழக்கு லடாக்கின் பங்கொங் சோ ஏரி அருகே பிங்கர் பகுதியில் இந்தியா முக்கியமான பாதையை அமைத்து வருகிறது. அத்துடன் கல்வான் பள்ளத்தாக்கில் இணைப்புப் பாதை ஒன்றையும் அமைத்து வருகிறது.

இந்த வீதிகள் அமைப்பதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. இந்நிலையில் கடந்த 5 ஆம் திகதி கிழக்கு லடாக்கில் பங்கொங் சோ ஏரி அருகே இந்திய-சீனப் படைகள் இடையே மோதல் ஏற்பட்டது.



இரும்புக் கம்பிகள், தடிகள் ஆகியவற்றைக் கொண்டு மோதினர். கல் வீச்சிலும் ஈடுபட்டனர். இதில், இரு தரப்பிலும் நூறிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பின்னர் 9 ஆம் திகதி சிக்கிம் மாநிலத்திலும் மோதல் நடந்தது. இதையடுத்து இரு நாடுகளும் தங்கள் படைப் பலத்தை அதிகரித்துள்ளதுடன் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவதால் எல்லைப் பகுதிகளில் பதற்றம் நிலவி வருகிறது.

இந்தியா-சீனா இடையே 3 ஆயிரத்து 488 கி.மீ. தூரத்துக்கு எல்லை உள்ளது. கடந்த 5 ஆண்டுகளாகத்தான் எல்லைப் பகுதிகளில் பாதை உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் இந்தியா தீவிரமாக உள்ளது.

சீனாவின் எதிர்ப்பை மீறி பாதை உள்ளிட்ட கட்டமைப்புப் பணிகளைத் தொடர இந்தியா முடிவு செய்துள்ளது. லடாக், சிக்கிம், உத்தரகாண்ட், அருணாசல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் எல்லைக் கோடு அருகே நடைபெறும் எந்தக் கட்டமைப்புப்பணிகளையும் மறுபரிசீலனை செய்ய வேண்டாம் என்று இராணுவ தலைமைக்கு இராணுவ அமைச்சர் ராஜ்நாத்சிங் உத்தரவிட்டுள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கு லடாக் சூழ்நிலை குறித்து ராஜ்நாத்சிங்கிடம் இராணுவத் தளபதி நரவனே தினந்தோறும் எடுத்துக் கூறி வருகிறார். அதில், சீனாவின் அத்துமீறலுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்க முடிவு செய்யப்பட்டது.

முப்படைகளில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து முப்படைத் தளபதிகளுடன் நேற்று முன்தினம் ராஜ்நாத்சிங் ஆலோசனை நடத்தினார்.

இதற்கிடையே, இந்திய இராணுவப் படைப்பிரிவு தலைவர்களின் 3 நாள் மாநாடு நேற்றுத் தொடங்கியது. கடந்த மாதம் நடத்த திட்டமிட்டிருந்த இம்மாநாடு, கொரோனா காரணமாக தள்ளி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-5)

## அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு; ஒன்பது பேர் பலி; 27பேர் காயம்!

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் சிக்காக்கோவில் இராணுவ வீரர்களின் நினைவு தினத்தில் கூடியிருந்த மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 9 பேர் உயிரிழந்ததுள்ளதுடன் 27 பேர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் மே மாதத்தின் இறுதி திங்கட்கிழமை இராணுவத்தில் பணியாற்றி உயிரிழந்த வீரர், வீராங்கனைகளை நினைவு கூரும் நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்நாளில் விடுமுறை விடப்பட்டும்.

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் வசிக்கும் பொதுமக்கள் இராணுவ அருங் காட்சியகம், நூலகம் போன்றவற்றிற்குச் செல்வார்கள். இது தவிர்த்து, விடுமுறை நாளைக் கழிக்க கடற்கரை, ஏரிக்கு மக்கள் செல்வர். மோட்டார் சைக்கிள்களில் நகர் வலம் வருவர்.

இந்நிலையில், அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் நினைவுதின விடுமுறையில் கூடி இருந்தவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். (2-5)

## ஆண் ஒருவர்...

வில் பகுதியைச் சேர்ந்த இரத்தினம் கந்த சாமி வயது 60 என்பவரே இவ்வாறு சடல மாக மீட்கப்பட்டவராவார்.

சடலத்துக்கு அருகாமையில் அவரது துவிச்சக்கரவண்டியும் நிறுத்தி வைக்கப்பட் டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக, சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,30,114)

## யாழ்.மத்திய...

இச்சம்பவம் நேற்று மதியம் யாழ்.மரு தனார்மடம் பகுதியிலிருந்து மானிப்பாய் செல்லும் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் யாழ்.மத்திய கல்லூரி யின் இளைப்பாறிய ஆசிரியரான 3 பிள்ளை களின் தந்தை எஸ்.சிவகாந்தன் (வயது-61) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவ்வாறு உயிரிழந்தவர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினரான எஸ்.தனுஜனின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விபத்து தொடர்பான மரண விசா ரணையை யாழ்.போதனா வைத்தியசாலை யின் திடீர் மரண விசாரணை அதிகாரி நம சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,9,78,114)

## படுகாயமடைந்த...

செவ்வாய்க்கிழமை இரவு 7.15 மணியள வில் இமையாணன் சந்திப் பகுதியில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அறிவகம் இமையாண னைச் சேர்ந்த துரையன் பசுபதி (வயது-60) என்பவர் படுகாயமடைந்த நிலையில், பருத் தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்ட போதும் நேற் றுக் காலை அவர் சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த நபர் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் ஒன்று அவர் மீது மோதியதாக தெரிவிக்கப் படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து விசாரணை களை மேற்கொண்ட நெல்லியடிப் பொலி ஸார் மோட்டார் சைக்கிள் ஓட்டுனரைக் கைது செய்துள்ளனர். (ம-3,60)

## யாழில்...

தாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள் ளார்.

புதிதாக கட்டட ஒப்பந்தம் ஒன்றினை மேற கொள்வது தொடர்பாக, சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்த மதபோதகருடன் பழகிய தாவடி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கொரோனோ தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி கொரோனா தொற்று அடையாளம் காணப் பட்ட நிலையில் கொழும்புக்கு அனுப்பி வைக் கப்பட்டு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

கொழும்பில் சுமார் 65 நாட்கள் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று புதன்கிழமை உடல் நலம் தேறி வீடு திரும்பியுள்ளார். (ம-3)

## பொலிஸார் மீது...

யாழ்ப்பாணம் - வடமராட்சி, வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு அண்மையாக உள்ள வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரை இலக்கு வைத்து நேற்றுக் காலை 7.10 மணியளவில் கிளை மோர் தாக்குதல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகத் தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மணல் கடத்தல்காரர்களினால் பொலி ஸாரை இலக்குவைத்து நடத்தப்பட்ட கிளை மோர் தாக்குதலாக இது இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் போல்ஸ் கள், வயர்கள் காணப்பட்டன.

இது தொடர்பில், இராணுவத்தினரும் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர்.

மண்ல் கடத்தலைக் கட்டுப்படுத்த சம்ப வம் இடம்பெற்ற இடத்தில் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுப் பது வழமையானது. அதுபோன்றே நேற்றும் சோதனை நடவடிக்கைக்கு தயாரான போது வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

பொலிஸாருக்கு இலக்கு வைக்கப்பட்ட கிளைமோர் சக்தி குறைந்த உள்ளூரில் தயாரிக்கப்பட்டது என பொலிஸார் தெரிவித் துள்ளனர். (ம-3,18,60,114)

## மணல் கடத்தல்...

நடத்திய ஆரம்பகட்ட விசாரணையில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்த நீர் விநியோகக் குழாய்க்கு பயன்படுத்தப்படும் என்கப்கள், சி4, சைக்கிள் போல்ஸ்கள், டெட் னேட்டர் மற்றும் பற்றறிகள் என்பவற்றைப் பயன்படுத்தி சக்தி குறைந்த கிளைமோர் குண்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கில் இடம்பெறும் மணல் கடத்தல்களை தடுக்கும் நோக்குடன் வல்லிபுர ஆழ்வார் முச்சந்திப் பகுதியில் பொலிஸார் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டு வருவதுடன்,

அந்தச் சந்திப் பகுதியில் உள்ள ஆலடிக் கட்டில் அமர்ந்திருந்து அந்த வீதியால் பயணிக்கும் டிப்பர்களின் அனுமதிப்பத்திர சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது வழமையாகும்.

இந்நிலையில், நேற்றைய தினமும் வழமையான வீதிச் சோதனை நடவடிக்கைக் காக குறித்த சந்திப்பகுதியில் பொலிஸ் உத்தி யோகத்தர்கள் இருவர் கடமையில் ஈடுபட்டி ருந்தனர்.

அவர்களில் ஒருவரின் காலில் மிதிபட்ட தில் மண்ணுக்குள் மறைத்து வைக்கப்பட் டிருந்த உள்ளூர் தயாரிப்பு கிளைமோர் வெடித்துள்ளது. அதன்போது பொலிஸ் உத்தி யோகத்தர் இலேசாக காயமடைந்துள்ளார்.

பொலிஸாரை அச்சுறுத்தும் வகையில் இந்தத் தாக்குதல் திட்டம் அமைந்துள்ளது. தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்தில் தடய வியல் ஆய்வுகளை மேற்கொண்டதுடன், தடயப் பொருட்களையும் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார மேலும் தெரிவித்துள்ளனர். (ம-3,60,114)

## இலங்கையில்...

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப் பட்டோரின் எண்ணிக்கை ஆயிரத்து 453 ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

நேற்று அடையாளம் காணப்பட்ட 134 பேரில் 53 பேர் தனிமைப்படுத்தல் நிலை யத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த கடற்படைச் சிப்பாய்களும், 81 பேர் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர் கள் என்றும் சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டி யுள்ளது.

இதுவரை 732 பேர் முழுமையாகக் குண மடைந்து வீடு திரும்பியுள்ளனர். 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

711 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## செட்டிக்குளத்தில்...

அப் பகுதியில் 7 வருடங்களுக்கு முன் னர் அமைந்திருந்த இராணுவ முகாமுக்கு அண்மையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் இருவர் மர்மப் பொருள் ஒன்றை எடுத்துச் சென்று சுத்தியல் ஒன்றினால் அதனை அடித்துள்ளனர். அதன்போது அந் தப் பொருள் திடீர் என்று வெடித்துள்ளது.

சிறுவர்கள் இருவரும் காயமடைந்த நிலையில், அவர்களை அங்கிருந்தவர்கள் மீட்டு செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலை யில் அனுமதித்துள்ளனர்.

இருவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த நியாஸ் சனாஸ் (வயது - 12), முகமட் ராசித் (வயது-16) ஆகிய இருவருமே காயமடைந் துள்ளனர்.

விபத்து தொடர்பாக செட்டிகுளம் பொலி ஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

# யாழில் 103 பேருக்கு கொரோனா பரிசோதனை

## எவருக்கும் தொற்றில்லை

(குப்பிழான்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடங்களில் நேற் றுப் புதன்கிழமை 103 பேருக்கான கொரோ னாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

எனினும், அவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 38 பேர், கிளிநொச்சி பாதுகாப்புப் படை ஆதார வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 38 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் பரிசோதிக்கப்பட்ட 10 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட 8 பேர், முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்தில் தங்கியிருந்த 7 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட 2 பேர் ஆகியோரே இவ்வாறு பரிசோத னைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3,18)

## ஹோட்டல்கள்...

மாவட்டத்தில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. எனினும் சுகாதார நடைமுறையை பின்பற் றாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

நாட்டில் கோவிட்-19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக, நாட்டில் இரண்டு மாதங்களாக ஊரடங்குச் சட்டம் நடைமுறை படுத்தப்பட்டு மீண்டும் நாடு படிப்படியாக வழமைக்குத் திரும்பியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டமும் வழமைக்குத் திரும்பியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக வுள்ளது.

இதனடிப்படையில், பலரின் வேண்டு கோளுக்கிணங்க யாழ்ப்பாணத்தில் உள்ள உணவகங்கள், நட்சத்திர விடுதிகள் மற்றும் திருமண மண்டபங்கள் போன்றவை புதிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொலி ஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய திறக்கப் பட்டு மக்களுக்கு சேவையாற்றுவதற்கு அனு மதி வழங்கியுள்ளோம்.

எனவே இந்த நிறுவனங்களின் உரிமை யாளர்கள் சுகாதார திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு அமைய தமது செயற்பாடுகளை முன்னெ டுக்க வேண்டும்.

அதாவது தமது நிறுவனத்தில் கடமை யாற்றும் ஊழியர்கள் கட்டாயமாக முகக் கவசம் மற்றும் கையுறைகளையும் அணிய வேண்டும்.

சுகாதார நடைமுறைகளை கட்டாயமாக பின்பற்றி சமூக இடைவெளியினையும் பேணியே பொதுமக்களுக்கு சேவையாற்ற வேண்டும்.

இந்த நிறுவனங் கள் பொலிஸாரி னால் கண் காணிக் கப் படும் போது எவரா யினும் சுகாதார நடைமுறையினை பின்பற்றாத விடத்து, சம்பந்தப்பட்டவர் களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என வும் தெரிவித்தார்.

ஏனைய மாவட் டங்களைப்போலவே எமது யாழ்ப்பாண மாவட்டத்திலும் மக் கள் இயல்பு வாழ்க் கைக்கு திரும்பு வதற்கு பொலிஸாரி னால் முழுமை யான ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே மக் களும் பொலிஸா ருக்கு உரிய ஒத்து ழைப்பினை வழ ங்க வேண்டும் என வும் அவர் கேட்டுக் கொண்டார். (ம-3)

## மூங்கிலாறு தெற்கில் கைக்குண்டுகள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூங்கிலாறு தெற்கு பகுதியில் காணி ஒன்றினை துப்புரவு செய்யும்போது கைக்குண்டுகள் சில இனம் காணப்பட்டுள் ளன.

மூங்கிலாறு தெற்கு பகுதியில் விவசாய காணியில் போரின்போது கைவிடப்பட்ட நீண்ட மண் அரண் காணப்பட்ட நிலையில் அதனை அகற்றித் தருமாறு கோரிக்கை விடுத்தபோதும் இதுவரை அகற்றப்படாத நிலையில் காணியின் உரிமையாளர் கன ரக இயந்திரம் கொண்டு குறித்த மண் அரணினை அகற்றி காணியினை சீர்செய் யும் போது மண்ணுக்குள் புதைக்கப்பட்ட சில கைக்குண்டுகள் இனம் காணப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தினை தொடர்ந்து, காணி யின் துப்புரவு பணிகள் கைவிடப்பட்ட நிலையில் சம்பவம் தொடர்பில் படையினர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். (ம-3,281)

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 27-05-2020 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2435 |

ஆங்கில எழுத்து: O
வெற்றி இலக்கங்கள்: 13 40 48 68
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 930
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.05.27
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,428,290/-
வெற்றி இலக்கங்கள்: 08 36 43 53
ஆங்கில எழுத்து: N
வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக 2020.04.01 என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம் உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| வெற்றி வாரம் | 2816 |
| வர்ணம் | பச்சை |
| திகதி | 27/05/2020 |

வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக 01/04/2020 என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.
வெற்றி இலக்கங்கள்: 09 11 36 49
கன்னி
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 8562
ரூ.100 பரிசுக்குரிய 814
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# அரிசிவகைகளுக்கு அதிகூடிய சில்லறை விலைகள் நிர்ணயம்

(கொழும்பு)

அரிசி வகைகளுக்கு அதிகூடிய சில்லறை விலை நிர்ணயித்து பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை அறிவித்துள்ளது. ஏப்ரல் 19ஆம் திகதி நிர்ணயித்த விலையிலும் பார்க்க அரிசி வகைகளின் விலை அதிகரித்துள்ளது.

இந்த புதிய விலை நிர்ணயம் நேற்று புதன்கிழமை நள்ளிரவு தொடக்கம் நடைமுறைக்கு வருவதாக அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதனடிப்படையில், நாட்டரிசி / குத்தரிசி ஒரு கிலோவின் அதிகூடிய சில்லறை விலையாக 96 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சம்பா ஒரு கிலோ சிவப்பு /வெள்ளை ஒரு கிலோ 98 ரூபாயும், கீரி சம்பா ஒரு கிலோ 125 ரூபாயும் அதிகூடிய சில்லறை விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த விலைக் கட்டுப்பாட்டை மீறும் வர்த்தகர்கள் மீது இன்று வியாழக்கிழமை தொடக்கம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாவனையாளர் அதிகார சபை அறிவித்துள்ளது. (ம-3)

# மோ.சைக்கிள் - துவிச்சக்கரவண்டி மீசாலை சந்தியில் விபத்து

## மூவர் படுகாயம்

(மீசாலை)

தென்மராட்சி-மீசாலை சந்திப் பகுதியில் நேற்று புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - துவிச்சக்கரவண்டி விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மீசாலை சந்தி ஊடாக துவிச்சக்கர வண்டியில் சிறுவன் ஒருவன் ஏ9 வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் யாழில் இருந்து கொடிகாமம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த 11 வயதான மீசாலை தெற்கைச் சேர்ந்த தே.சச்சுதன் மோட்டார் சைக்கிளில் பயணித்த தவசிகுளம் கொடிகாமத்தைச் சேர்ந்த 18வயதான அ.அஜேந்திரன் மிருசுவில் தெற்கைச் சேர்ந்த 18 வயதான லக்சன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,114)


விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-9624)
0768226240



மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1988ஆம் ஆண்டு பிறந்த திருவாதிரை நட்சத்திரம், கிரக பாவம் 16 உடைய சிங்கப்பூரில் வேலை பார்க்கும் அழகிய மணமகனுக்கு மணமகள் தேவை.
அரச உத்தியோகம் விரும்பத்தக்கது.
(2870)
தொடர்புக்க
076 202 9162


# தொண்டமானின் மறைவு அறிந்து அதிர்ச்சி அடைந்தேன்

## நீதியரசர் விக்னேஸ்வரன் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

ஆறுமுகன் தொண்டமானின் மறைவு அறிந்து அதிர்ச்சி அடைந்தேன். புதிய இந்திய தூதுவரைச் சந்தித்து வந்து சில மணித்தியாலங்களில் இறைவனடி சேர்ந்து விட்டார் என நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தனது இரங்கலை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆறுமுகன் பல தடவைகள் என்னைக் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் சந்தித்துள்ளார். யாழ்ப்பாணம் வரும் போது முடியும் போதெல்லாம் வந்து சந்திப்பார். அவர் என்னை அரசியல்வாதி என்ற ரீதியில் சந்திப்பதை விட தனது பாட்டனாரின் நண்பர் என்ற முறையிலேயே வந்து பலமுறை சந்தித்ததுண்டு.

சௌமியமூர்த்தி தொண்டமான் கொழும்பில் என் வீட்டுக்கு அருகாமையில் றோயல் கல்லூரிக்கு முன்புறத்தில் தான் அந்தக் காலங்களில் குடியிருந்தார். அவரை ஒரு முறை நானும் வேறு சிலரும் சந்தித்த போது தனக்குப்பின் யார் என்று அவர் அங்கலாய்த்ததை நாம் கண்டோம். மகன் இராமநாதன் நல்லவர் என்றும் ஆனால் அவரால் தனது பதவியின் சுமையைத் தூக்க முடியுமா, தாங்க முடியுமா? என்று உரக்கக் கேட்டார்.

அப்போது தான் அவரின் பேரன் ஆறுமுகனை உள் கொண்டு வருவது பற்றிப் பேசப்பட்டது. ஆறுமுகனே தகுந்த வாரிசு எனவும் அவர் வயதில் குறைந்தவராக இருந்தாலும் காலா காலத்தில் பொறுப்புடன் நடந்து கொள்வார் என்றும் அங்குள்ளவர்களால் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. சில காலங்களில் ஆறுமுகன் தனது பணியை ஏற்றார்.

காலக்கிரமத்தில், அவர் தம் பணியை உணர்ந்து மலையக மக்களுக்கு ஒரு வலுவான தலைவராகத் திகழ்ந்தார். பாட்டனாரின் வழியில் அவர் அவர்களை திறம்பட வழி நடத்தி வந்து சடுதியாக எம்மைவிட்டுப் பிரிந்தமை மலையக மக்களுக்கும் எமக்கும் மிகுந்த துயரையும் துக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மலையக மக்களின் தலைமைத்துவத்தில் ஒரு பாரிய இடைவெளி தெரிகின்றது. தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஒரு சவாலான காலகட்டமான இத் தருணத்தில் ஆறுமுகன் தொண்டமானின் மறைவு ஒரு பேரதிர்ச்சியாக உணரப்படுகிறது. அவரின் வெற்றிடம் விரைவில் தக்கவரால் நிரப்பப்பட வேண்டும்.

ஒருவர் சடுதியாக வானுலகு ஏகுவது புண்ணியம் என்று கூறுவார்கள். அந்த விதத்தில் ஆறுமுகன் தொண்டமான் நீண்டகால சுகயீனத்தையோ துன்பத்தையோ எதிர் நோக்காமல் சென்றமை ஒரு புண்ணியம் என்றே கொள்ள வேண்டும்.

ஆறுமுகன் குடும்பத்தினருக்கு எனது உளமார்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முக்கியமாகத் தம்பி செந்தில் தொண்டமானுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆறுமுகன் தொண்டமானின் ஆத்மா இறையடி சேர்வதாக என்று தெரிவித்துள்ளார். (ம-3)


வேலையாட்கள் தேவை
பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் உடனடியாகத் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழில் சார்ந்த நபர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
குறிப்பு:- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (C-9614)
076 635 6560 / 075 055 6560



Tourist Visa to Shangan Country

இளைஞர் யுவதிகள் France and Germany போன்ற நாடுகளுக்கு சுற்றுலா விசாவில் செல்வதற்கான இலகுமுறை வழிகாட்டும் சந்தர்ப்பம்.
தொடர்பு : 077 225 9030
sunholidayhome@gmail.com
No.136, Brown rd Jaffna.
(2893)




மீண்டும்

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
(C-9625)
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536



விழிநீர் சொரிந்து அஞ்சலிக்கின்றோம்

எம்மோடு பயணிக்கும் **சி.தனுஜன்** (ஆசிரியர் யா/யூனியன் கல்லூரி, உறுப்பினர் - யா/மாநகரசபை) அவர்களின் பாசமிகு தந்தையார்
அமரர் **சின்னத்துரை சிவகாந்தன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ்.மத்திய கல்லூரி)
அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
யாழ் எய்ட்
Yarl Aid
(2903)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

# வடக்கு மாகாண கல்வி அமைச்சும் வலம்புரியும் இணைந்து வழங்கும் கல்விச் சேவை
# தரம்-5 புலமைப்பரிசில் வினாத்தாள்

நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடம் வினாப்பத்திரம் - II

01. பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

சித்திரை வந்தால் வசந்தம் பிறக்கும்
வண்ண வண்ணப் பூக்கள் எங்கும்
கொத்துக் கொத்தாய் மலர்ந்து பொலியும்
இக் காட்சிதனைக் காணக் களிப்புடன் வாரீர்!

பூக்களில் வண்டுகள் தேன் குடிப்பதைப் பாரீர்!
மகிழ்வுடன் கீதம் இசைப்பதைக் கேளீர்!
சிறகடித்து எழுந்து அங்கும் இங்கும்
செல்வதைப் பாரீர் அதோ செல்வதைப் பாரீர்!

1. இப்பாடலில் காலப்பெயராக அமைவது எது?
......................................................................................
2. "வண்ண வண்ண" என்பது என்ன தொடராகும்
......................................................................................
3. இணைமொழி ஒன்று தருக.
......................................................................................
4. மகிழ்வுடன் கீதம் இசைப்பது எது?
......................................................................................
5. அஃறிணை பலவின்பால் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று தருக.
......................................................................................
6. "மகிழ்வுடன்" எனும் சொல்லுக்குரிய ஒத்த பதத்தை எழுதுக.
......................................................................................
7. ஒத்த ஓசைச்சொல் 2 தருக.
......................................................................................
8. இரட்டைக் கொம்பும் அரவும் உள்ள சொல் ஒன்று எழுதுக.
......................................................................................

02. சரியான சொல்லைத் தெரிவுசெய்க.
1) அமச்சர் , அமைச்சர், அமச்சார் , ஆமச்சர்
2) நட்டத்திரம் , நட்சச்திரம் , நட்சத்திரம் , நச்சத்திரம்

03. பின்வரும் வினாக்களில் உள்ள புள்ளிக்கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லை வைத்து எழுதுக.
1) நூலகத்திற்கு நூல்கள் போன்று பேருந்துக்கு ..........................................
1) வியாபாரிகள் 2) நடத்துநர் 3) பயணிகள்
2) விமானத்திற்கு விமானி போன்று கப்பலுக்கு
1) மாலுமி 2) சாரதி 3) படகோட்டி

04. சுருக்கக் குறியீட்டை விரித்து எழுதுக.
கி.மு ..........................................

05. பின்வரும் பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியை நிரப்பி எழுதுக.
(மட மட , வாடிவதங்கி , கணீர் கணீர், நகமும் சதையும், கலகல )
1) சந்தையில் காய்கறிகள் .......................................... க் காணப்பட்டன.
2) ஆலய மணி .................................... என்று ஒலித்தது.

06. சேர்த்து எழுதுக.
மா+காய் ...............................
முள்+புதர் ...............................

07. பிரித்து எழுதுக.
பழவகை ......................+ ...........................
பூவரும்பு ......................+...........................

08. தொடர்மொழிக்கு ஒரு மொழியைத் தருக.
நம்ப முடியாத கதை ..........................................

09. பின்வரும் பழமொழிகளை வாசித்து இடைவெளிகளை பூரணப்படுத்தி எழுதுக.
1) கேட்காத கடனும் ..........................................................
2) .......................................... பயிர் காற்பயிர்

10. பின்வரும் விடுகதைக்குரிய விடையை எழுதுக.
1) கண்ணில் தென்படும் கையில் பிடிபடாது அது என்ன?
......................................................................................

11. பின்வவரும் தகவல்களை வாசித்து அவை அறிவித்தலா, அறிவுறுத்தலா, கட்டளையா என புள்ளிக் கோட்டினுள் எழுதுக.

1) வீடுகளில் நீர்தேங்கி நிற்கும் இடங்களை சுத்தமாக வைத்திருங்கள்
......................................................................................
2) கீழ்த்தட்டில் உள்ள பெட்டியிலிருந்து நீலநிறப் பந்தை எடுத்து வாருங்கள்
......................................................................................
3) நித்திரையின் போது கைப்பேசியைத் தலையணைக்கு அருகில் வைக்க வேண்டாம்
......................................................................................

12. பின்வரும் இறந்த கால வாக்கியத்தை நிகழ்கால வாக்கியமாக எழுதுக.
1) நாங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றோம்.
......................................................................................

13. பின்வரும் வசனத்தில் உள்ள அடைமொழிகளை தெரிந்து எழுதுக.
1) பச்சை வயல்களில் வெள்ளைக் கொக்குகள் வண்ண மீனைப் பிடித்தன.
1) ............................ 2) ..........................................
3) ....................................

14. வெற்றிடத்திற்கு வரவேண்டிய வினைச்சொல்லைத் தெரிந்து எழுதுக.
1) பூந்தோட்டத்தில் மல்லிகைப் பூக்கள் ........................... (மலர்ந்தது / மலர்ந்தன)


15. ஆண்பால் வாக்கியத்தை பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.
அவரது மருமகன் வெளிநாட்டில் வசிக்கிறான்.
......................................................................................

16. பின்வரும் பாடல் இடைவெளியைப் பூர்த்தி செய்க.
வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்
......................................................................................
எண்ணங்கள் செய்கைகள் யாவும்
......................................................................................

17. பின்வரும் தொடர் வாக்கியத்தை தனிவாக்கியங்களாக எழுதுக.
எமது தாய்நாட்டையும், பாடசாலையையும் பேணிப் பாதுகாக்க வேண்டும்.
I)......................................................................
II)......................................................................

18. பின்வரும் வாக்கியத்திற்கு பொருத்தமான நிறுத்தற் குறியை இடுக.
நாட்டின் அழகு என்னே - ..........................................................

19. பின்வரும் காட்சிப் படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்கள் ஐந்து சொற்களுக்கு மேல் உள்ளவாறு எழுவாய், பயனிலையை அவதானித்து எழுத்துப் பிழையின்றி எழுதுக.



1) ......................................................................................
......................................................................................
2) ......................................................................................
......................................................................................
3) ......................................................................................
......................................................................................

20. பின்வரும் ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்க்கருத்தை எழுதுக.
1) Food - ..........................................
தமிழில் உள்ள வாக்கியத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
2. நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள்? ..........................................

21. 1. சிங்களச் சொல்லிற்குரிய தமிழைத் தருக.
பகளொவ ..........................................
2. தமிழில் உள்ள வசனத்தை சிங்களத்தில் எழுதுக.
நேரம் என்ன? ..........................................

22. 1. பின்வரும் எண்ணைச் சொற்களில் எழுதுக.
375 ......................................................................................

2. 16 உடன் 12 ஐயும் 8 ஐயும் கூட்டினால் விடை யாது?
......................................................................................

3) ஆசிரியரின் மேசையின் நீளம் 1 மீற்றரும் 25 சென்ரிமீற்றரும் எனக்கூறமுடியும் இதனை குறியீட்டில் எழுதுக. ..........................................

4. பின்வரும் உருவிற்கு வரையக்கூடிய சமச்சீர் கோடுகளை வரைந்து காட்டுக.



5. சிட்டையைப் பூரணப்படுத்துக.

| பொருள் | அளவு | அலகு ஒன்றின் விலை (Kg) ரூபா சதம் | பெறுமதி ரூபா சதம் |
|---|---|---|---|
| 1) சீனி | 500g | 90.00 | .................. |
| 2) தேயிலை | 250g | 420.00 | .................. |
| மொத்தம் | | | .................. |

6. பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி விடையளிக்குக.

| மாணவர் விரும்பும் பழங்கள் | விரும்பும் மாணவர் | மொத்தம் |
|---|---|---|
| I) மாம்பழம் | ////////// | ................. |
| II) வாழைப்பழம் | //////////// | ................. |
| II) அப்பிள் | ////// | .............. |

IV) அதிக மாணவர் விரும்பும் பழம் எது? ..........................................................

V) அப்பிளைவிட வாழைப்பழம் விரும்பும் மாணவர் எத்தனை பேர்? ...............................

7. பின்வரும் V உரோமன் எண்ணின் முன், பின்வரும் உரோமன் எண்களை இடைவெளியில் எழுதுக.

........................... V ..............................

8. 256m நீளமுள்ள கம்பி ஒன்றை 4m துண்டுகளாக வெட்டினால் பெறப்படும் துண்டுகளின் எண்ணிகைகள் யாது? ..........................................................................

9. ஒரு வரிசையில் 10 கொடிகள் தொங்கவிடப்பட்டுள்ளன. அவ்வாறான 24 வரிசையில் உள்ள கொடிகளின் எண்ணிக்கை யாது? ..............................................

10. மோட்டார் வாகனமொன்றில் 28l பெற்றோல் இருந்தது .பயணமொன்றின் பின் அதில் 20l 750ml பெற்றோல் எஞ்சி இருந்தது பயணத்திற்கு செலவாகிய பெற்றோலின் அளவு எவ்வளவு?

..........................................................................................

11. ஒரு பையினுள் 10kg 750g பருப்பும் இன்னொன்றில் 12kg 350g பருப்பும் உள்ளது இரு பைகளிலும் உள்ள பருப்பின் அளவுகளிடையே உள்ள வித்தியாசத்தை kg . g இல் தருக.

..........................................................................................

12. 1227 . 1302 . 1244 ஆகிய எண்களில்

I) பத்துக்களின் எண்ணிக்கை யாது? ..........................................................

II) நூறுக்களின் எண்ணிக்கை யாது? ..........................................................

13. 36 ஐ டீன்ஸ் தொகுதியினால் வகைக்குறித்து வரைந்து காட்டுக.

23. 

1) பின்வரும் சூரியநமஸ்காரப் படத்தினை அவதானித்து எத்தனையாவது படிநிலை என தெரிவு செய்க.

1) 4 2) 3 3) 5 4) 1

2) தேசிய இலட்சினையில் நெற்கதிரும் பூவிதழும் குறித்து நிற்கும் விடயம் முறையே.
1) தன்னிறைவும் தூய்மையும் 2) தன்னிறைவும் சௌபாக்கியமும்
3) தூய்மையும் தன்னிறைவும் 4) தார்மீகமும், நிலைத்திருப்பும்

3) தலதா ஊர்வலத்தை கொண்டாடும் இனத்தவர்கள்.
1) தமிழர் 2) சிங்களவர் 3) முஸ்லிம் 4) பறங்கியர்

4) கேசரங்கள் அதிகம் காணப்படும் பூ.
1) ரோசா 2) கடதாசிப்பூ 3) செவ்வரத்தை 4) எக்சோரா

5) மூலிகைக்கு பயன்படும் தாவரங்கள்.
1) வெட்டிவேர், துளசி 2) முல்லை , குறிஞ்சா
3) பூவரசு, புடோல் 4) நாகதாளி, கள்ளி

6) வண்ணத்துப்பூச்சியின் முட்டை பெரும்பாலும் காணப்படும் இலையுள்ள தாவரம்.
1) அகத்தி 2) ஆலிலை 3) வாதராணி 4) மாமரம்

7) கப்பி, இயந்திரங்கள் தேய்வுற்றிருந்தால் செய்யவேண்டியது.
1) உராய்தல் 2) எண்ணெய் இடல் 3) நீரூற்றுதல் 4) துருப்பிடித்தல்

8) கைக்குட்டை தயாரிக்க பயன்படும் துணித்துண்டு.
1) நைலோன்துணி 2) பொலித்தீன் துணி
3) பருத்தித்துணி 4) கம்பளித்துணி

9) உடல்வளர்ச்சி, உடல் பாதுகாப்பு, உடலுக்கு சக்திதரும் உணவுக்கூட்டம் முறையே.
1) மரவள்ளி, பால், முட்டை 2) இறைச்சி, பூசணி, ஈரப்பலாக்காய்
3) மீன், தக்காளி, கடலை 4) கத்தரி, முட்டை, பால்

10) பானவகை அருந்துவதற்கு பொருத்தமான உபகரணம்
1) பிளாஸ்ரிக் கப் 2) செம்புப் பாத்திரம்
3) கண்ணாடி டம்ளர் 4) சில்வர் கோப்பை

11) நோய்க்காவிகளான ஆட்கள் மூலம் ப்ரவும் நோய்கள்.
1) டெங்கு 2) மலேரியா 3) சீதபேதி 4) சின்னமுத்து

12) குறித்த வேளையில் உணவு உண்ணாதிருப்பதால் ஏற்படும் நோய்.
1) நீரிழிவு 2) புற்றுநோய் 3) இரப்பை அழற்சி 4) காய்ச்சல்

13) பயிர்களை விலங்குகளிடமிருந்து பாதுகாக்க பயன்படும் பொருள்.
1) நீர்வெருளி 2) நீராவிச்சுழலி 3) நீர்ப்பாம்பு 4) புரிசாவி

14) வீதியைக் கடக்கும் சந்தர்ப்பங்களில் செய்யக்கூடிய நல்ல விடயம்.
1) மற்றுமொருவருடன் உரையாடிக் கொண்டு செல்லல்
2) தொலைபேசியை பயன்படுத்தியவாறு செல்லல்.
3) குழுமமாக பாதுகாப்பற்ற வகையில் செல்லல்.
4) சுயபாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளல்.


15) பொதுப் போக்குவரத்துச் சேவையை பயன்படுத்துவதனால் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் ஒன்று.
1) விரும்பிய இடத்திற்கு சென்றுவரமுடியாமை
2) குறைந்த செலவில் பயணிக்கலாம்.
3) பொருள்களைக் கொண்டு செல்லலாம்.
4) அதிக பயணிகள் பயணிக்கலாம்.

16) வீட்டுத் தோட்டத்தில் இரசாயனப் பசளை பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புக்களில் ஒன்று.
1) நச்சுத்தன்மையற்ற உணவு கிடைத்தல்.
2) சுவையான மரக்கறி, பழங்கள் கிடைத்தல்.
3) உணவுப் பொருளுடன் நச்சுத்தன்மை சேர்தல்
4) ஆரோக்கியமான தாவரங்களை பெறமுடிதல்.


17) பிராணிகளுக்கு தீங்கு ஏற்படாது அப்பிராணிகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க உதவும் உபகரணங்களில் ஒன்று.
1) மண்வெட்டி 2) முள்ளுக்கரண்டி 3) காற்றுக்கிலுக்கி 4) குப்பை வாரி

18) பின்வரும் உபகரணங்கள் பயன்படும் வேலைகளை எழுதுக.





................................ ................................


20) 

A B C D

21) எந்த ஒரு வேலையையும் செய்யும் போது சரியாகத் திட்டமிட்டு முறையாக ஒழுங்காகச் செய்வதால் கிடைக்கக்கூடிய அசௌகரியங்களில் ஒன்று.
1) நேரத்தையும் உழைப்பையும் மீதப்படுத்தலாம்
2) அனைவரதும் பாராட்டைப் பெறலாம்
3) சமூகத்திற்கு சிறந்த சேவையை வழங்கலாம்
4) வேலையை இலகுவாக செய்யமுடியாது.

22) சிறுவர்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகளில் அடங்காதது.
1) பாடசாலைக்கல்வி 2) அன்பு, கருணை, அரவணைப்பு
3) உணவு, உடை, பானம் 4) உடல்ரீதியான சித்திரவதை

23) பின்வரும் மண் பரிசோதனையில் A , B ,C ,D , E என்பன காணப்படுகின்றது. இதில் E குறிப்பது.




1) குறுனிக்கல் 2) உக்கல் 3) பெருமணல் 4) சிறுமணல்

24) வானத்தில் இருந்து விழும் ஒவ்வொரு மழைத்துளியையும் வீணாகாது பயன்பெற வேண்டும் எனக்கூறிய மன்னன்.
1) மகாசேனன் 2) தாதுசேனன் 3) மகாபராக்கிரமபாகு 4) துட்டகைமுனு

25) பின்வரும் மாவட்டங்களான கொழும்பு, அம்பாறை ஆகியன உள்ள மாகாணங்கள் முறையே
1) மேல்மாகாணம், மத்திய மாகாணம் 2) சப்ரகமுவ மாகாணம், தென்மாகாணம்
3) வடமாகாணம், கிழக்கு மாகாணம் 4) மேல் மாகாணம், கிழக்கு மாகாணம்

26) உள்ளூர் தபால் இடப்படும் பெட்டியின் நிறம்
1) சிவப்பு 2) பச்சை 3) நீலம் 4) மஞ்சள்

27) Voice mail என அழைக்கப்படுவது.
1) தொலைத்தந்தி 2) மின்னஞ்சல் 3) குரல் வழி அஞ்சல் 4) தொலைநகல்

28) இலங்கையில் மிகப்பெரிய பெருக்குமரம் உள்ள இடம்
1) யாழ்ப்பாணம் 2) மன்னார் 3) வவுனியா 4) காலி

29) சிலோன் நஷனல் ரிலீவ் எனும் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக விளங்கியவர்.
1) ஆதர் சி கிளாக் 2) ரீ.பி.ஜாயா
3) வன எஸ்.மகிந்த 4)கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

30) பின்வருவனவற்றுள் பலாப்பொத்தி அலங்காரம் குறிப்பது.

1) 

2) 

3) 

4) 

# வடக்கு மாகாண கல்வி அமைச்சும் வலம்புரியும் இணைந்து வழங்கும் கல்விச் சேவை

# க.பொ.த.சாதாரணதரம் - நாடகமும் அரங்கியலும்

நேரம்: ஒரு மணித்தியாலம் வினாப்பத்திரம் - 01

பகுதி I

அறிவுறுத்தல்கள்

*எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடைஎழுதுக

*இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிவு செய்க.

பகுதி I

(1) நாடகம் எனும் கலைவடிவம் தோன்றியது
1. நாட்டியத்திலிருந்தாகும்
2. பொம்மலாட்டத்திலிருந்தாகும்
3. சடங்கிலிருந்தாகும்
4. நிழலாட்டத்திலிருந்தாகும்

(2) ஒபேறாநாடக மரபு தோற்றம் பெற்றநாடு
1. பிரான்ஸ்
2. இத்தாலி
3. சீனா
4. ஜப்பான்

(3) கலைஞனைக் கலைமுதற் பொருளாகக் கொண்ட கலை வடிவங்களை மாத்திரம் கொண்ட தொகுதி
1. நாடகம், நடனம், வில்லுப்பாட்டு, ஓவியம்
2. வில்லுப்பாட்டு, கதாகலாட்சேபம், சிலம்பம், இசை
3. நாடகம், நடனம், இசை, சிற்பம்
4. கட்டடம், சிற்பம், ஓவியம், இலக்கியம்

(4) பின்வருவனவற்றுள் மலையகக் கூத்து அல்லாதது?
1. மகிடிக்கூத்து
2. காமன் கூத்து
3. அருச்சுணன் தபசு
4. பொன்னர் சங்கர்

(5) மஹாகவி உருத்திரமூர்த்தியின் நாடகமல்லாதது
1. புதியதொருவீடு
2. கோடை
3. பொருளோபொருள்
4. முற்றிற்று

(6) மேடைப்பரப்பொன்றிலே முக்கியத்துவம் குறைந்த பகுதியாகக் கருதத்தக்கது
1. UC 2. DC
3. CC 4. DL

(7) தானாயம் பொல எனும் அரங்கவெளியில் இடம்பெறும் ஆற்றுகை வடிவம்
1. தொவில் 2. கோலம்
3. சொக்கரி 4. நூர்த்தி

(8) அண்ணாவியார் நாடகமரபு என அழைக்கப்படும் கலைவடிவம்
1. கூத்து 2. இசைநாடகம்
3. வில்லுப்பாட்டு 4. பலே

(9) வசந்தகான சபையைத் தோற்றுவித்தவர்
1. நடிகமணி வி.வி.வைரமுத்து
2. கலையரசு சொர்ணலிங்கம்
3. காரைசுந்தரம்பிள்ளை
4. பம்பல் சம்பந்தமுதலியார்

(10) மரபுவழிக் கூத்தில் பயன்படுத்தப்படும் அரிதாரம் என்பது
1. மேடையைக் குறிக்கும்
2. மேடைப் பொருளைக் குறிக்கும்
3. ஒப்பனைப் பொருளைக் குறிக்கும்
4. ஒரு வகை உணவைக் குறிக்கும்

(11) பரதமுனிவர் குறிப்பிடும் ரசம் அல்லாதது
1. சிருங்காரம் 2.ரௌத்ரம்
3. பக்தி 4. பயானகம

(12) அரங்கிற்கான இசையின் நோக்கங்களில் ஒன்றாக அமைவது
1. பாத்திரங்களின் குரலைமெருகூட்டுவதற்காக
2. நாடகப் பாடலுக்குமெட்டைத் தருவது
3. நாடக மத்திலுள்ள உணர்ச்சிக் கட்டங்களின் தாக்கத்தை மேம்படுத்துவதற்கு
4. நாடகத்தைக் கவர்ச்சியாக்குவதற்கு

(13) நாடகம் ஒன்றிற்கான விளம்பரத்தினை மேற்கொள்பவர்
1. நாடக ஆசிரியர்
2. நெறியாளர்
3. தயாரிப்பாளர்
4. மேடைமுகாமையாளர்

(14) நடிப்பதைப் பார்த்து பார்ப்போருக்கு ஏற்படும் மனவெளிப்பாட்டினை தொல்காப்பியத்தில் எவ்வாறு அழைப்பர்
1. ரச 2. யூஜின்
3. கதாசிஸ் 4. மெய்ப்பாடு

(15) ரட்டயக்குமச் சடங்கின் பிரதான நோக்கம்
1. நோய் தீர்த்தல்
2. ஊருக்குநன்மை வேண்டுதல்
3. குழந்தைவரம் வேண்டுதல்
4. மழைவளம் வேண்டுதல்

(16) பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம் என்ற நூலை எழுதியவர்
1. கா.சிவத்தம்பி
2. சி.மௌனகுரு
3. காரைசுந்தரம்பிள்ளை
4. க.சிதம்பரநாதன்

(17) குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் முதலாவது நாடகம்
1. ஆரொடுநோகேன்
2. அருமை நண்பன்
3. கூடி விளையாடு பாப்பா
4. தாயுமாய் நாயுமானார்

(18) "என்னடி உந்தன் கோப்பியில் ஒருசிறு..." எனும் பாட்லுக்குரிய ஆண் பாத்திரம்
1. குணசீலன்
2. மணிசேகரம்
3.குலசேகரம்
4. சந்திரசேகரம்

(19) மனோரதிய நாடகங்களின் காட்சியமைப்பு பெரும்பாலும்
1. சாதாரண வாழ்வு நிலைப்பட்டதாகும்
2. குறியீட்டுத் தன்மை கொண்டதாகும்
3. அழகும் ஆடம்பரமும் நிறைந்ததாகும்
4. யதார்த்தமானதாகும்

(20) பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் வரலாற்று நாடகம்
1. பொருளோபொருள்
2. தவறானஎண்ணம்
3. துரோகிகள்
4. சங்கிலி

(21) பின்வருவனவற்றுள் கூத்தினையும் பரதத்தினையும் இணைத்து செய்யப்பட்ட நாடகங்கள்
1. சக்தி பிறக்குது, முழங்குமுரசு
2. புதியதொரு வீடு, கோடை
3. கந்தன் கருணை,ஏகலைவன்
4. இராவணேசன், சங்காரம்

(22) பின்வருவனவற்றுள் கூத்தின் பண்பு அல்லாதது
1.ஆடல், பாடலூடாகக் கதைசொல்லல்
2.எடுத்துரைக்கும் பண்புடனான அளிக்கை
3. நீண்ட பெருங்காட்சித் தன்மை கொண்ட மேடை
4. நாட்டிய தர்மிப் பாணியிலான நடிப்பு

(23) ஈழத்துத் தமிழ் நாடக மரபிலே இயற்பண்பு சார்ந்த ஆங்கில நாடக மரபின் தாக்கத்தால் எழுந்த சொல்லாடல் நாடக மரபினைத் தோற்றுவித்தவர்
1. கலையரசுசொர்ணலிங்கம்
2. சு.வித்தியானந்தன்
3. க.கணபதிப்பிள்ளை
4. கா.சிவத்தம்பி

(24) நாடகமொன்றின் கடைசி ஒத்திகை எவ்வாறு அழைக்கப்படும்
1.தொழில்நுட்ப ஒத்திகை
2.வாசிப்பு ஒத்திகை
3. கடைசி ஒத்திகை
4. ஊடை ஒத்திகை

(25) மேடைப் பரப்பொன்றின் பகுதிகளை பொதுவாக எத்தனை பகுதிகளாகப் பிரிப்பர்?
1. 3  2. 6
3. 8  4. 9

(26) புதியதொரு வீடு நாடகமோடி எவ்வகை சார்ந்தது
1. யதார்த்தம்
2. யதார்த்த விரோதம்
3. மோடிமை கலந்த யதார்த்தம்
4. யதார்த்தம் கலந்த மோடிமை

(27) இசை நாடகத்தின் தந்தை எனக் குறிப்பிடப்படுபவர்
1. பம்மல் சம்பந்த முதலியார்
2. வி.வி.வைரமுத்து
3. சங்கரதாஸ் சுவாமிகள்
4. கோமல் சுவாமிநாதன்

(28) "மனிதமாடு" சிறுகதையின் ஆசிரியர்
1. வ.அ.இராசரெத்தினம்
2. அ.செ.முருகானந்தம்
3. சனாசண்முகநாதன்
4. செழியன்

(29) இரு துயரங்கள் எனும் நாடகத்தை எழுதியவர்
1. இ.முருகையன்
2. அம்பி
3. சுஹைர் ஹமீட்
4. தாசீசியஸ்

(30) பபூன் எனும் பாத்திரம் இடம்பெறும் நாடகவகை
1.கூத்து
2. கதகளி
3. இசைநாடகம்
4. விலாசம்

(31) பத்தினித் தெய்வத்துடன் தொடர்புடைய சிங்களச் சடங்கு
1. கோலம்
2. செக்கரி
3. சன்னியக்கும
4. கொஹொம்ப ஹங்காரிய

## தரம் -05 வினாப்பத்திரம் விடைகள் பகுதி -01

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 11) 3 | 21) 3 | 31) 1 |
| 2) 3 | 12) 3 | 22) 2 | 32) 2 |
| 3) 3 | 13) 2 | 23) 1 | 33) 3 |
| 4) 2 | 14) 2 | 24) 2 | 34) 3 |
| 5) 3 | 15) 3 | 25) 3 | 35) 3 |
| 6) 2 | 16) 1 | 26) 3 | 36) 1 |
| 7) 2 | 17) 3 | 27) 1 | 37) 1 |
| 8) 1 | 18) 3 | 28) 3 | 38) 3 |
| 9) 1 | 19) 2 | 29) 3 | 39) 2 |
| 10) 1 | 20) 3 | 30) 3 | 40) 1 |

(32) ஒரு நாடகத்திற்கான காட்சி அலங்காரம் என்பது
1. எப்போதும் பின்னாலேயே இருக்கும்
2. அளிக்கையின் பிரதான மோடியை நிலைநிறுத்தும்
3. எப்போதும் நடப்பியல்பை ஒத்ததாக இருக்கும்
4. பகட்டாகவும் ஆடம்பரமானதாகவும் இருக்கும்

(33) வரவுப் பாட்டு என்பது
1. பாத்திரம் தானேபாடுவது
2. சேவகர் பாடுவது
3. அண்ணாவியார் பாடுவது
4. பக்கப்பாட்டுக்காரர் பாடுவது

(34) மக்கள் களரி எனும் நாடக நிறுவனத்தின் ஸ்தாபகர்
1. தர்மஸ்ரீ பண்டாரநாயக்க
2. பராக்கிரம நிரியல்ல
3. எதிர்வீர சரச்சந்திர
4. குணசேன கலபதி

(35) இந்தியக் கலைஞர்களுடன் இணைந்து இந்தியாவிலும் இசை நாடகங்கள் நடித்த ஈழத்து ஆளுமை
1. வி.வி.வைரமுத்து
2. எம்.வி.கிருஸ்ணாழ்வார்
3. பொன்னாலை கிருஸ்ணன்
4. தைரியநாதன்

(36) ஊமச் சித்திரிப்புடன் தொடர்பற்ற அபிநயம்
1. ஆங்கீகம்
2. ஆஹார்யம்
3. வாச்சீகம்
4. சாத்வீகம்

(37) அருகிலுள்ள படம் குறிக்கும் ஆற்றுகை வடிவம்

1. தெருக் கூத்து
2. கதகளி
3. மணிப்புரி
4. ஒடிசி

(38) அருகிலுள்ள படம் குறிக்கும் நாடக வகை

1. கூத்து
2. இசை நாடகம்
3. சிறுவர் நாடகம்
4. நடன நாடகம்

(39) படம் குறிக்கும் ஈழத்தின் புகழ் பூத்த வில்லிசைக் கலைஞர்

1. கணபதிப்பிள்ளை
2. சத்தியதாசன்
3. மதியழகன்
4. ஸ்ரீதேவி ஐயர்

(40) படம் குறித்து நிற்கும் ஈழத்தின் சிறந்த ஒப்பனையாளர்களுள் ஒருவர்

1. நா.சுந்தரலிங்கம்
2. சு.தாசீசியஸ்
3. ஏஸ்.ரி.அரசு
4. பிரான்சிஸ் ஜெனம்

## க.பொ.த சாதாரணதரம் கர்நாடக சங்கீதம் விடைகள் பகுதி -01, 02

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 16) 3 | 31) 4 | 46) 3 |
| 2) 4 | 17) 4 | 32) 4 | 47) 2 |
| 3) 1 | 18) 1 | 33) 1 | 48) 4 |
| 4) 4 | 19) 2 | 34) 4 | 49) 2 |
| 5) 2 | 20) 3 | 35) 3 | 50) 3 |
| 6) 4 | 21) 3 | 36) 2 | 51) 1 |
| 7) 3 | 22) 4 | 37) 2 | 52) 1 |
| 8) 2 | 23) 2 | 38) 3 | 53) 4 |
| 9) 1 | 24) 3 | 39) 3 | 54) 4 |
| 10) 1 | 25) 1 | 40) 3 | 55) 2 |
| 11) 4 | 26) 1 | 41) 4 | 56) 1 |
| 12) 2 | 27) 4 | 42) 4 | 57) 3 |
| 13) 2 | 28) 2 | 43) 1 | 58) 2 |
| 14) 3 | 29) 4 | 44) 1 | 59) 2 |
| 15) 3 | 30) 2 | 45) 3 | 60) 1 |

**பகுதி II**
1. மிருதங்கம்
2. இராகமாலிகை
3. வயலின்
4. பேரின்பப் பதங்கள்
5. பல்லியம்
6. தவில்
7. குருகுஹ
8. நீலாம்பரி
9. ப்ரஹலாத பக்தி விஜயம், நௌகா சரித்திரம், சீத்தா இராம விஜயம்
10. சங்கீர்ண ஜாதி ரூபகதாளம், மிஸ்ரஜாதி திரிபுடைதாளம்